பக்கங்கள்: பதினான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 07 புதன்கிழமை (24-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:300

### வடபகுதி பாதுகாப்பு நிலைமை குறித்து

## அமைச்சர் மகேஸ்வரனுக்கு நேற்று சபையில் உரையாற்ற அனுமதி மறுப்பு!

வடபகுதி பாதுகாப்பு நிலைமை, மக்கள் முகம் கொடுத்து வரும் அன்றாடப் பிரச்சினைகள், அகதிகள் மீள் குடியேற்றம் ஆகியவை தொடர்பாக நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்துப் பேச இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று முற்பட்டார். ஆயினும், அதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகள் பேச அனுமதிக்கலாம் என குரல் எழுப்பிய போதிலும் நிலையியற் கட்டளையின்படி அவர் பேச இடமில்லை என்று சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தடைபோட்டு விட்டார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர் தலைமையில் கூடியது. வழமையான சபை நடவடிக்கைகளின் பின்னர் அமைச்சர் மகேஸ்வரன் விசேட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துப் பேச முனைந்தார்.

அப்போது, அமைச்சர் என்ற ரீதியிலா, உறுப்பினர் என்ற ரீதியிலா

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொப்பேகடுவ, தளுவத்தவுக்கு நேர்ந்ததை வடபகுதித் தளபதி புரிந்துகொள்ள வேண்டும்

### அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

யாழ். குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குக் குறுக்கே தடைபோட்டு நிற்கும் இராணுவமும், அதன் வடபகுதித் தளதிபதியான சரத் பொன்சேகாவும் ஒரு காலத்தில் குடாநாட்டின் 'ஹீரோக்களாக இருந்த டென்சில் கொப்பேகடுவ, ரொஹான் தளுவத்த ஆகியோருக்கு நேர்ந்த கதியைப் புரிந்து கொள்ள வேண்டும்'.

- இவ்வாறு கூறினார் அமைச்சர் தி.மகேஸ்வரன்.

கடற்றொழில் நீர்வாழ் உயிரினங்கள் தொடர்பான திருத்தச்சட்ட வரைவு மீதான விவாதத்தில் பேசுகையில் அவர் இப்படிக்கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மீனவர்கள் வாழ்ந்த இடங்களில் அவர்களை விரட்டியடித்துவிட்டு அங்குள்ள வீடுகளில் இராணுவத்தினர் சொகுசு வாழ்க்கை நடத்துகின்றனர். எமது மீனவர்கள் இன்றும் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தென்பகுதியில் இந்த மாதிரியான செயற்பாடுகள் இடம்பெறுமா? அப்படி இடம்பெற்றாலும் மக்கள் பார்த்துக் கொண்டு வாளாவிருப்பார்களா?

அன்றாடம் தொழில் செய்துவரும் மீனவர்கள் நிம்மதியாக வாழ வழி

(14ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் இன்று தடையின்றி 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள்!

## எங்கும் விழாக் கோலம்; மக்கள் குதூகலம்

வவுனியா,செப்ரெம்பர்24

**பாதுகாப்புப் படையினரின் அச்சுறுத்தல்களும் நெருக்குவாரங்களும் அகன்று, இடையூறுகள் எல்லாம் நீங்கி தங்குதடையின்றி வவுனியா நகர சபை திறந்தவெளி அரங்கில் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் உணர்ச்சிபூர்வமாக இன்று நடைபெறுகின்றன. 'பொங்கு தமிழ்' நிகழ்வையொட்டி வவுனியா நகரம் விழாக்கோலம் பூண்டிருக்கிறது. மக்கள் மனதில் குதூகலம்.**

- எமது வீடுகளுக்கு நாம் செலவதற்காக நீங்கள் (இராணுவத்தினர்) உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்.
- வடக்கு - கிழக்கிற்கு பூரண அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படவேண்டும்.
- நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதற்காக நிரந்தரமான தீர்வு வேண்டும்.

முக்கியமாக இந்த மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்தே 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் தமிழ்ப் பகுதிகள் எங்கும் நடத்தப்படுகின்றன. கடல் கடந்த நாடுகளிலும் புலம் பெயர்ந்த தமிழர்களால் நடத்தப்படுகின்றன.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக இன ஒடுக்கலுக்குட்பட்ட தமிழினம் தனது பண்பாடுகளையும், கலாசாரங்களையும் வெளிக்கொண்டு வரவும் அவற்றைப் பேணிப்பாதுகாப்பதற்கும் தேவை உள்ளது என்றும் பொதுமக்களும் பொது ஸ்தாபனங்களும் 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளுக்கு அணிதிரளவேண்டும் என்றும் ஏற்பாட்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் கருணா, பதுமன் தலைவர் பிரபாவுடன் பேச்சு

கிளிநொச்சி,செப்.24

கிளிநொச்சிக்கு நேற்றுக்காலை வந்து சேர்ந்த விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளான கேணல் கருணா, கேணல் பதுமன் ஆகியோர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் கலந்துரையாடியுள்ளனர்.

இடைக்கால நிர்வாக சபை வரைவு மற்றும் கிழக்கு நிலைமை ஆகியன தொடர்பாக இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

இதற்கு முன்னர் இரு தளபதிகளும விமானப்படையின் ஹெலி மூலம் நேற்றுக்காலை கிளிநொச்சி வந்தடைந்தனர்.

அவர்களை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் பொறுப்பாளர்கள் வரவேற்றனர். (ஓ)



நேற்று வன்னி வந்த தளபதிகள் கேணல் கருணா, கேணல் பதுமன் ஆகியோரை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அழைத்துச் செல்கிறார்.

## பல்கலை மாணவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,செப்.24

முகத்தில் காயமடைந்த நிலையில யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர், நேற்று முன்தினம் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட்டே இவர் காயமடைந்ததாக கூறப்பட்டது.

அளவெட்டி, கணேசபுரத்தைச் சேர்ந்த கலைப்பீட முதலாம் வருட மாணவரான குணசிங்கம் சுதாகர் (வயது 21) என்பவரே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவார்.

யாழ் பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலையில் வைத்தே இம்மாணவர் தாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.(ஓ-10-6)

## 14 இலங்கை அகதிகள் ராமேஸ்வரத்தில் கைது!

ராமேஸ்வரம்,செப்.24

இலங்கைக்கு சட்ட விரோதமாக வரவிருந்த இலங்கை அகதிகள் 14 பேர் ராமேஸ்வரம் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர். கரையிலிருந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பீடிகளும் கைப்பற்றப்பட்டன.

கடத்தல் தொடர்பாக கிடைத்த ஒரு தகவலை அடுத்து காத்திருந்த பொலீஸாரே இந்த அகதிகளைக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தீவகம் மற்றும் சங்கானையில் திலீபன் நினைவு ஊர்திப்பவனி

யாழ்ப்பாணம்,செப்.24

தியாகி லெப்.கேணல். திலீபனின் 16ஆவது நினைவு கூரலின் 10ஆவது நாளான இன்று தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய நினைவூர்திகள் தீவகம் மற்றும் சங்கானைப் பிரதேசங்களில் பவனி வரவுள்ளன.

தியாகி திலீபனின் நினைவு ஊர்தியை தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையிடம் இருந்து தீவக கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் நேற்று மாலை பொறுப்பேற்றனர்.

நேற்றைய தினமே ஊர்தி பண்ணை வீதி வழியாக புறப்பட்டு தீவகப் பகுதிக்குள் நுழைந்தது. அலைப்பிட்டிச்சந்தி, அராலிச்சந்தி, வங்களாவடிச்சந்தி ஆகிய இடங்களூடாக, பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்தை ஊர்தி சென்றடைந்தது.

இன்று காலை 8 மணிக்கு முத்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் குழு அடுத்த வாரம் அயர்லாந்து செல்கிறது

கிளிநொச்சி,செப்.24

அயர்லாந்தில் இடம்பெறவிருக்கும் அரசியல் நிபுணர்களுடனான சந்திப்பில் கலந்துகொள்வதற்காக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் அடுத்த வார நடுப்பகுதியில் புறப்படுகின்றனர்.

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள வரைவு குறித்து சர்வதேச நிபுணர்களுடன் விடுதலைப் புலிகளின் குழுவினர் ஆராயவுள்ளனர்.

நோர்வே அனுசரணையாளர்களின ஏற்பாட்டில் இடம்பெறும் கருத்தரங்கு ஒன்றிலும் இவர்கள் கலந்துகொள்வர்.

இதேவேளை -

ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கு கொள்ள நியூயோர்க் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு வந்துள்ள அயர்லாந்து அரச உயர் மட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

அயர்லாந்து கூட்டத்தில் கனடாவின் கியூபெக் மாகாண முன்னாள் சட்ட அமைச்சர் பேராசிரியர் ஜில்ஸ் ரெமிலி யாட் என்பவரும் கலந்துகொள்வார் என்றும் நம்பப்படுகிறது.(ஓ-3)


## கனேடிய அமைச்சர் பிரபாவுடன் சந்திப்பு?

அடுத்தமாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில்கிரஹம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலரி ரேமண்ட் கடந்த வாரம் கிளிநொச்சியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியபோது; கனேடிய அமைச்சரை புலிகளின் தலைவர் சந்திக்கும் வாய்ப்புக் குறித்து ஆராயப்பட்டதாகவும் -

அமைச்சர் பில் கிரஹம் தனது சுற்றுப் பயணத்தின் போது கிளிநொச்சி வந்து சில மணித்துளிகளைச் செலவிட முடியுமானால் அவரைத் தலைவர் பிரபாகரன் சந்திப்பதில் தடையேதும் இருப்பதாகத் தெரியவில்லை என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்தி!

(14ஆம் பக்கம் பார்க்க)



நிமலராஜன் படுகொலை வழக்கு:

# தன்னிச்சையான வாக்குமூலம் அளிக்க ஈ.பி.டி.பி. முன்னாள் உறுப்பினர் விருப்பம்

கொழும்பு,செப்.24

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பாக திருகோணமலையில் வைத்துக்கைது செய்யப்பட்ட ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் யாழ். நீதிவான் முன் தன்னிச்சையாக வாக்குமூலம் அளிக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

யாழ் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வழக்குத் தொடர்பான தமது விசாரணை முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நிமலராஜன் கொலை தொடர்பாக திருகோணலை, செல்வநாயகபுரம், பாடசாலை வீதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் உதயபவன் என்ற நபரைக் கைது செய்து திருகோணலை நீதிமன்றத்தில் கடந்த 5ஆம் திகதி ஆஜர் செய்திருந்தோம். அவரை யாழ். நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தற்சமயம் மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவரை, யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், போக்குவரத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அவரை, அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யமுடியவில்லை. விரைவில் அவரை மன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை -

சந்தேகநபரை குற்றப்புலனாய்வுப பிரிவினர் கைது செய்த சமயம், அவரைத் தாக்கிச் சித்திரவதை செய்தனர். அதற்காக யாழ். நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி சந்தேகநபரின் தாயார் சார்பில யாழ். நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை ஆராய்ந்த நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா - சந்தேக நபரை திருமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம், இந்த மனுவை அங்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு மனுத்தாக்கல் செய்யப்பட்டதாக யாழ். நீதிமன்றுக்கு எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்.

சந்தேக நபர் தாக்கப்பட்டிருந்தால் இது அவரின் மனித உரிமையை மீறும் செயல் என நீதிமன்றம் கருதுகின்றது என்றும் கூறினார்.

சந்தேகநபரை சட்ட வைத்திய அதிகாரியின் முன் முற்படுத்தி, அவரது மருத்துவ அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-3-8)

# வன்னி நெல்லின் விலை குறித்த நிதித்துறை அறிவிப்பில் திருத்தம்

வன்னிப்பகுதியில் விளையும் நெல்லுக்கான குறைந்தபட்ச உத்தரவாத விலை 11 ரூபா 50 சதம் எனவும் -

தாம் விடுத்த செய்திக்குறிப்பில் ஆகக்குறைந்த விலை என்பது ஆகக் கூடிய விலை எனத் தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுவிட்டதாகவும் -

தமிழீழ நிதித்துறையின் நடுவப் பணியகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நெல்லின் உத்தரவாத விலை குறித்து தமிழீழ நிதித்துறை நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது வன்னியில் ஒரு மூட்டை நெல் (70 கிலோ) 650 ரூபாவுக்குக் குறைந்த விலையிற் கொள்வனவு செய்யப்படுவதனால் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளோர் முதலையே இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந் நிலையை நீக்குவதற்காக நெல்லுக்கான ஆகக்குறைந்த உறுதியளிக்கப்பட்ட விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேற்றிலிருந்தே ஒரு கிலோ நெல்லை 11 ரூபா 50 சதத்துக்கு குறையாத விலையிற் கொள்வனவு செய்யுமாறு வணிகர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

வன்னியிற் தேங்கியிருக்கும் சம்பா நெல்லை எளிதாகச் சந்தைப்படுத்துவதற்காகச் சம்பா நெல் மீதான ஏற்றுமதித் தீர்வை அறவீடு நேற்றிலிருந்து எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# மனிதநேயமிக்கவர்களின் உதவியுடன் யாழ். ஆஸ்பத்திரியில் பணிகள்!

## பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

மனிதநேயம் கொண்டோரின் உதவியுடன் வைத்தியசாலைப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம்.

சுகாதார சேவை ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக வைத்தியசாலைத் தொழிற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன. ஆயினும் அவசர சிகிச்சைப்பிரிவு, அதிதீவிர சிகிச்சை பிரிவு மற்றும் சத்திர சிகிச்சைப்பிரிவு என்பன இயங்கி வருகின்றன. சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியின் பாடசாலைகள் மற்றும் வெளிக்களப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் ஆஸ்பத்திரியில் சேவையாற்றி வருகின்றனர்.

இவர்கள் நோயாளரை எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் சமயாசமய ஊழியர்களும் கடமையாற்றுகின்றனர். இவர்கள் உட்பட மனித நேயம் மிக்கவர்களின் உதவியுடன் வைத்தியசாலைப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- இவ்வாறு பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ-86)

# 'சார்ஸ்' சந்தேகத்தால் இறந்த பெண்ணின் மரண விசாரணை

## சாவகச்சேரி நீதிமன்றில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.24

'சார்ஸ்' நோயால் பீடிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டு கடந்த மே மாதம் யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழந்த சாவகச்சேரியை சேர்ந்த இளம் பெண்ணின் மரண விசாரணை இன்று சாவகச்சேரி நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ்.கந்தசாமி முன்னிலையில் இடம்பெறவுள்ளது.

இம்மரண விசாரணைக்கென உயிரிழந்த பெண்ணின் உறவினருடன் யாழ். போதனா வைத்தியசாலையின சட்டவைத்திய அதிகாரி, அன்றைய தினம் அவசர சிகிச்சைப்பிரிவில் கடமையிலிருந்த வைத்தியர் மற்றும் தலைமைத் தாதி ஆகியோரை நீதிமன்றத்தில் சமுகமளிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த குறிப்பிட்ட பெண்ணின் மரணவிசாரணை தொடர்பான வாக்குமூலங்கள் ஏற்கனவே கடந்த மே மாதம் 14ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியிலும் இந்த மாதம் 8ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றிலும் வைத்துப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்றும் வாக்குமூலங்கள் பெறப்படவுள்ளன.

மேற்படி பெண்ணின் சடலம் தனிமைப்படுத்தி தொற்று நோய்களை தடுபபதற்கான சிறப்புச் சட்டத்தின் கீழ் உடனடியாக தகனம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# நாரந்தனை தாக்குதல் வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணை

தேர்தல் பிரச்சாரத்துக்காக தீவுப் பகுதிக்குச் சென்ற கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் நாரந்தனையில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை யாழ் நீதிமன்றில் நேற்று நடைபெற்றது.

இவ்வழக்கின் 7ஆம், 10ஆம் சாட்சிகளான திருநாவுக்கரசு ரவீந்திரன், நவரத்தினம் கணேஸ்வரன் ஆகியோர் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். எனினும், ஊர்காவற்றுறைப் பொலீஸார் சாட்சிகளை நெறிப்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை.

இதேவேளை, குற்றவியல் சட்டப்படி கொலை வழக்குகள் சம்பந்தமான சுருக்க முறைவற்ற விசாரணை ஒரு வருடத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். என்பதால் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி சாட்சிகளை நெறிப்படுத்துவதற்கு ஆயத்தமாக வருமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா .பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளர். (ஒ-8)

## கரப்பந்தாட்டம்

வலி.வடக்கு,செப்.24

அமரர் கா.சந்திரராசா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 14 வயதிற்கு உட்பட்டோருக்கான அணிகள் இடையே இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ஒ-86)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.24

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் கா.சந்திரராசா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

☆ வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி எதிர் சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்.

☆ விக்ரோறியாக் கல்லூரி எதிர் தொல்புரம் விக்கினேஸ்வராக் கல்லூரி. (ம-5)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.24

கீரிமலை - கூவில் சிவானந்தா முன்பள்ளி விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இள்வாலை போயிட்டி மைதானத்தில் க.மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவனேசனும் சிறப்பு விருந்தினராக சங்கானைப் பிரதேச அரசியற்றுறைப் பொறுப்பாளர் அன்புவும் கலந்துகொள்வர். (ஒ-5-29)

# அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கைக்கு சு.க.-ஜே.வி.பி. தயாராகவே உள்ளன

## இரு கட்சிகளினதும் செயலாளர்கள் அறிக்கை

ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஆட்சியிலிருந்து அகற்றுவது குறித்து எந்த ஒரு நேரத்திலும் பேச்சு நடத்தி இணக்கத்துக்கு வருவதற்கான தயார் நிலையிலேயே சு.க. - ஜே.வி.பி. முன்னணிப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டன என்று அவ்விரு கட்சிகளும் கூறுகின்றன.

இது தொடர்பாக இரு கட்சிகளினதும் பொதுச் செயலாளர்கள் கூட்டாக அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றனர். அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

சு.க. - ஜே.வி.பி. முன்னணிப் பேச்சுக்கள் முறிவடைந்து இரண்டு வாரங்கள் கழிந்துவிட்டன. இக்காலப் பகுதியில் சு.க.வுக்கும் ஜே.வி.பிக்குமிடையே மோதலை ஏற்படுத்த ஐ.தே.க. ஊடகங்கள் முயற்சித்துள்ளன.

இரு கட்சிகளுக்குமிடையே அரசியல் கருத்து முரண்பாடுகள் உள்ளன. அந்த முரண்பாடுகளே முன்னணி அமைப்பதை தடுத்துள்ளன. ஆயினும், முன்னணி அமைப்பது பற்றிய பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வழிவிட்டே அப்பேச்சுக்கள் நிறுத்தப்பட்டன.

எனவே, இவ்விரு கட்சிகளிடையே மோதலை உருவாக்கும் ஐ.தேகவின் சூழ்ச்சிகளை நம்பவேண்டாம்.

- இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ)

# பொருளாதார கூட்டு ஆணைக்குழு நிறுவ இலங்கையும் பஹ்ரெய்னும் இணக்கம்

## பிரதமர் ரணில் நியூயோர்க்கில் பேச்சுக்கள்

கொழும்பு,செப்.24

இலங்கைக்கும் பஹ்ரெய்னுக்கும் இடையே பொருளாதார - வர்த்தக உறவுகளை உறுதிப்படுத்துவதற்காக இரு நாடுகளுக்குமிடையே கூட்டு ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும்.

நியூயோர்க்குக்கு விஜயம் செய்திருக்கும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பஹ்ரெய்ன் பிரதிப் பிரதமர் பின் முபாரக் அல் கலீபாவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களில் இதற்கான இணக்கம் காணப்பட்டது.

பஹ்ரெய்னில் தொழில் செய்யும் இலங்கையர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து சிறந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதும் இந்த ஆணைக்குழு அமைக்கப்படுவதன் நோக்கமாகும்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்பேச்சுக்களில் அமைச்சர்களான டிரோன் பெர்னாண்டோ, மிலிந்த மொறகொட ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ

# வலைப்பந்தாட்ட இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் லண்டன் தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம், தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்திய 17 வயதிற்குட்பட்டோருக்கான மாவட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் எஸ்.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபரும், யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் தலைவருமான அ.பஞ்சலிங்கமும், சிறப்பு விருந்தினராக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம்.குணசிங்கம் கலந்துகொள்வர்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதும்.

இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை மோதும்.(ம-5)

## இறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகள்



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை



தெல்லிப்பழை யூனியன் கல்லூரி



.....எமது போராட்ட பாதை அமைதி தழுவியதாகவோ அல்லது இரத்தம் தோய்ந்ததாகவோ அமைய வேண்டுமெனத் தீர்மானிக்க வேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே.....


- தியாகி திலீபன்.

# ஐ.நா. பிளவுபடும் அபாயம்! கோபி அனான் எச்சரிக்கை!!

## அமெரிக்காவின் தான்தோன்றித்தனமே காரணம்

நியூயோர்க்,செப்.24

அமெரிக்காவின் தான்தோன்றித் தனத்தால் ஐ.நா.சபை பிளவுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று ஐ.நா.செயலர் நாயகம் கோபி அனான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.







ஐநா பொதுச் சபையில் நேற்று உரையாற்றுவதற்கு முன்பதாகவே அங்கு உரையாற்றவுள்ள விவரத்தை அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தாக்குமுன் தாக்குவது என்ற அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் கோட்பாடு ஐ.நாவுக்கு அடிப்படையான சவால்களைத் தோற்றுவித்துள்ளன. எந்த ஒருநாடும் இவ்வாறு எண்ணிச் செயற்படும் நிலையை இது தோற்றுவிக்கமுடியும்.

அமெரிக்காவின் இந்தப் போக்கால் ஏற்படும் நெருக்கடி ஐ.நாவின் பாதையை பிரிந்து செல்லும் இரு வழிகளாக மாற்றும் சிக்கலில் தள்ளியுள்ளது. ஐ.நாவை உருவாக்கும் போது 1945 இல் இருந்தது போன்ற தீர்க்கமான ஒரு கட்டம் மீண்டும் ஏற்பட்டுள்ளது.

ஈராக்கை ஆக்கிரமித்ததன் மூலம் அமெரிக்கா ஏற்படுத்திய வடுக்களை குணப்படுத்தும் நடவடிக்கைகளில் ஐ.நா. இப்பொழுது போராடி வருகின்றது.

மரபுவழி ஆயுதங்கள் தவிர்ந்த ஏனைய பேரழிவு ஆயுதங்கள், அவை தயாரித்து முடிக்கப்படாத நிலையிலிருப்பினும்கூட அவற்றுக்கு எதிராக தாக்குமுன் தாக்கும் இராணுவ நடவடிக்கையை நாடுகள் எடுக்கலாம் என்ற நிலையையே அமெரிக்கா கொண்டுவர முயல்கிறது.

இது ஐநா. சாசனத்துக்கு முரணானது. தற்போது காப்புக்காக மட்டுமே நாடுகள் இராணுவ நடவடிக்கை எடுப்பதை ஐநா.சாசனம் அனுமதிக்கிறது.

தாக்குமுன் தாக்கும் கொள்கை ஏற்றுக் கொள்ளப்படுமாயின் அது முன்னுதாரணமாகிவிடும். அதாவது நம் பத்தகுந்த நியாயப்பாடுகள் இன்றியும் ஒருதலைப்பட்சமாகவும் சட்டமொன்றிற்கு கட்டுப்படாத வகையில் படைப்பலத்தை பயன்படுத்தும் நிலை உருவாகுதற்கு அது இடமளிக்கும் - என்று தெரிவித்தார்.

தனது உரையின் இறுதியில் அவர் "மேன்மை தாங்கியவர்களே! எமது பாதை இடையில் பிளவுபட்டுச்செல்லும் நிலைக்கு வந்துள்ளது. எனவே அக்கறையுடனும் - நிதானத்துடனும் - முடிவுகளை எடுங்கள்" என்று தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, ஜனாதிபதி புஷ் ஈராக் தொடர்பான அமெரிக்காவின் கொள்கைகளை வலியுறுத்தியுள்ளார். பொக்ஸ் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர், ஈராக்குடன் போருக்கு சென்றமை சரியான தீர்மானமே என்றார். ஐநாவுக்கு ஈராக்கின் புனர்நிர்மாணத்தில் பெரும் பங்கு ஏதும் தேவையில்லை எனவும் ஆனால், ஈராக்கிற்கு அரசியல் யாப்பை இயற்றி வழங்கும் உதவியை அது செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஐம்பது சிறுவர்கள் உகண்டாவில் பலி!

லண்டன்,செப்.24

உகண்டா-ருவண்டா எல்லையில் பாடசாலை சிறுவர்களை ஏற்றிவந்த பஸ் ஒன்றும் லொறி ஒன்றும் மோதியதில் 50 சிறுவர்கள் பலியாகியுள்ளனர்; 30பேர் காயமடைந்துள்ளனர்.

எல்லைக்கிராமமான கட்டுனாவிலிருந்து ஐநா. உணவுத்திட்டத்தின் கீழ சோளம் ஏற்றி வந்த லொறியும், புறுண்டியிலிருந்து பாடசாலை சிறுவர்களை ஏற்றி வந்த பஸ்ஸும் நேருக்கு நேர் மோதின.

லொறி பஸ்ஸுடன் மோதிய வேகத்தில் பஸ் தூக்கிவீசப்பட்டதுடன் வீட்டு வாசலில் அமர்ந்திருந்த பெண் ஒருவரின் உயிரையும் பறித்தது. இந்த அனர்த்தத்தில் அந்த இடத்திலேயே 50பேர் மரணமானார்கள். ஏனையோர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விடுமுறைக்குப்பின் பாடசாலைகள தொடங்கியதால் ருவண்டாவிலிருந்தும் புறுண்டியிலிருந்தும் உகண்டா வந்த வந்த பாடசாலைச் சிறுவர்களே பஸ்ஸில் அதிகளவு இருந்தனர்.

பஸ் அதிவேகத்துடன் பிழையான பக்கமாக வந்து கொண்டிருந்ததாகவும இந்த அனர்த்தத்தில் இரண்டு வாகனங்களினதும் சாரதிகளும் கொல்லப்பட்டனர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

வீதி விபத்துக்களுக்கு பெயர் பெற்ற உகண்டாவில் கடந்த ஆண்டு பஸ் ஒன்றும் லொறிஒன்றும் மோதியதில் 70பேர் கொல்லப்பட்டனர். கடந்த ஆண்டில் 15 ஆயிரம் வீதி விபத்துக்கள் நடந்தன என்று பொலீஸார் தெரிவித்தனர். கடந்த வருடம் மட்டும் வீதி விபத்துக்களில் அங்கு 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் ஆகாயத் தாக்குதல்; மூன்று பொதுமக்கள் உயிரிழப்பு!



ஈராக்கின் பாலுஜா நகரில் அமெரிக்கப்படையினர் நேற்று நடத்திய ஆகாயத் தாக்குதலில் மூன்று சிவிலியன்கள் கொல்லப்பட்டனர்; மேலும் மூவர் காயமடைந்தனர்.

சதாமின் ஆதரவாளர்கள் ஒளித்திருக்கின்றனர் என்று கருதியே இத்தாக்குதல்களை தாம் நடத்தியதாக அமெரிக்கப்படை கூறுகிறது.

அமெரிக்கப்படையின் 82 ஆவது விமானப்படைப்பிரிவே இத்தாக்குதலை நடத்தியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே - ஈராக்கின் வடக்கு நகரான மொசுலில அமைந்துள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகம் நேற்று முன்தினம் தாக்கப்பட்டது. இதில் மூன்று படையினர் காயமடைந்தனர் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக வளாகத்தினுள் மறைந்திருந்த சிலரே இத்தாக்குதலை நடத்தினர் என்றும், இதனால் அப்பகுதிகளைப் படையினர் முற்றுகையிட்டுள்ளனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# செப்ரெம்பர் 11 தாக்குதல் திட்டத்தை 1996 இல் பின்லேடன் தீட்டினார்!

## கைதாகியுள்ள முக்கிய சூத்திரதாரி தகவல்

வாஷிங்ரன்,செப்.24

அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கான சதித்திட்டத்தை 1996 ஆம் ஆண்டே பின்லேடன் தீட்டினார் என்ற திடுக்கிடும் விவரம் தெரியவந்துள்ளது.

செப். 11 ஆம் திகதி அல்-கெய்டா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் சதியில் முக்கிய பங்குவகித்த காலித் ஷேக் முகம்மது என்பவரை பிடித்து அமெரிக்க புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

விசாரணையில் முகம்மது தெரிவித்ததாவது:-

2001 ஆம் ஆண்டுத் தாக்குதலுக்கான சதித்திட்டம் 1996 ஆம் ஆண்டே தீட்டப்பட்டது. பின்லேடனுடன் கலந்தாலோசித்து அவரது வழிகாட்டலின்படியே அல்-கெய்டா தீவிரவாதிகள் இந்தச் சதித்திட்டத்தை வகுத்தனர்.

செப்ரெம்பர் 11 ஆம் திகதி தாக்குதல் திட்டம் இறுதியாவதற்கு முன் பல்வேறு கோணங்களில் வியூகங்கள் வகுக்கப்பட்டன. பயணிகள் விமானங்கள் ஐந்தைக் கடத்தி அவற்றைக் கொண்டு அடுத்தடுத்து அமெரிக்க துறைமுகங்கள் மீது தாக்குதல் நடத்த முதலில் திட்டமிடப்பட்டது.



முதல் அணியாக 22 தீவிரவாதிகளை ஏற்றிக்கொண்டு 4 விமானங்களும் அதைத் தொடர்ந்து தற்கொலைப்படைப்பிரிவைச் சேர்ந்த தீவிரவாதிகளுடன் மற்றொரு விமானமும் பறந்து இத்தாக்குதலை நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதே போல், கிழக்காசியாவில் பயணிகள் விமானத்தை கடத்துதல் அல்லது குண்டுவீசித் தாக்குதல் நடத்துவது என்றும் சதித்திட்டம் தீட்டப்பட்டது.

ஆனால் இந்த இரு திட்டங்களையும் பின்லேடன் பல்வேறு திருத்தங்கள் செய்து கடைசியில் உலக வர்த்தக மைய கட்டடம் மற்றும் பென்டகனை குறிவைத்து தாக்கும் செப்ரெம்பர் 11 தாக்குதல் திட்டத்தை இறுதி செய்தார்.

இத்தாக்குதல் திட்டத்தை நிறைவேற்ற பின்லேடன் நான்கு தற்கொலைப் படை தீவிரவாதிகளை தேர்ந்தெடுத்தார். அவர்களில் காலித் அல்-மிஹ்தார் மற்றும் நவாப் அல்-ஹஸ்மி ஆகியோரை முதலில் கலிபோர்னியாவுக்கு அனுப்பிவைத்தார். அவர்கள் வந்து சேர்ந்ததும் அவர்களுடன் இன்ரர்நெற் மூலம் அடிக்கடி பேசித்திட்டம் குறித்து ஆலோசனை செயதார்.

அமெரிக்க விமானங்களை கடத்தி இச்சதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கென்றே தனிக் குழுவை பின்லேடன் ஏற்படுத்தினார். இந்தக் குழுவுக்கு அல்-கெய்டா செயல்படும் பல்வேறு நாடுகளிலிருந்து ஆளகளைத் தேர்ந்தெடுத்தார். ஆனால் இறுதிக் கட்டத்தில் சவுதி அரேபியாவைச் சேர்ந்தவர்களையே அதிகம் பயன்படுத்த முடிவு செய்தார் - என்று கூறினார்.

# ஆங்சாங் சூகியை விடுவிக்க ஐ.நா.பிரதிநிதி விரைகின்றார்

ரங்கூன்,செப்.24

மியான்மார் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சாங் சூகியை உடனடியாக விடுவிக்கக் கோரும் முயற்சியில் ஐ.நா. தனது விசேட தூதுவர் ரசாலி இஸ்மெயிலை அங்கு அனுப்பவிருக்கின்றது.

ரசாலி செப்30 ஆம் திகதி விஜயம செய்து ஆங்சாங் சூகியுடனும் பிரதமாகின் நியுன்றுடன் பேச்சுக்கள் நடத்துவார் என்று ஐ.நா. பேச்சாளர் பிரட் எக்ஹாட் தெரிவித்துள்ளார். சூகியை தடுப்புக்காவலிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் இந்தோனேசிய சிரேஷ்ட அதிகாரி அலி அலட்டாஸ் ஏற்கனவே அங்கு சென்றிருக்கும் நிலையில் ரசாலியின் விஜயம் முக்கியம் பெறுகிறது.

இராணுவ அரசினதும், சூகியினதும் ஆதரவாளர்கள் மோதிக்கொண்டதை காரணங்காட்டி மேமாதம் 30 ஆம் திகதி முதல் இராணுவ ஆட்சியாளர்கள் சூகியை தடுப்புக் காவலில் வைத்திருக்கின்றனர்.

58 வயது நிரம்பிய இவரை சந்திப்பதற்கு ஒருவர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். கடந்த சனிக்கிழமை இவர் ரங்கூனிலுள்ள வைத்தியசாலையில் சிறிய சத்திர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அங்கு செல்லும ரசாலி, சூகியை நிபந்தனையின்றி விடுவிக்குமாறு கோருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



சாமியே சரணம் ஐயப்பா!
காரையம்பதி சத்திரந்தை விநாயகர் ஆலயத்தில் இன்று (24.09.2003) புதன்கிழமை காலை
மண்டலாபிஷேகம்
ஈழத்துச் சிதம்பரத்தைத் தன்னகத்தே கொண்ட வன்புலி வாகனன் ஐயப்பன் சோதரன் விக்கினங்கள் தீர்த்தருளும் ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு நடைபெறுகின்ற மண்டலாபிஷேகம் சிறப்புடன் இனிதே நிறைவெய்த வணங்கி வாழ்த்துகின்றேன்.
கனகசபை சுந்தரலிங்கம்
(காரை மணிகண்டன்)
காரைநகர்.
(27) (22923)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

22.09.2003 அன்று யாழ். மாவட்ட
விளையாட்டுத்துறை அதிகாரியாகப் பதவியேற்ற,
எமது கழகத்தின் முன்னாள் தலைவரும்,
தற்போதைய போஷகருமான

## திரு.றோகன் இராஜசிங்கம்

அவர்களை கழகத்தின் சார்பில்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிறாஸ்கொப்பர்ஸ் வி.க.,
தெல்லிப்பழை.

(22919) (24-14-17)

# சிறுநீரகம் (KIDNEY) வழங்கி உயிர் காப்பீர்!

32 வயது இளைஞனுக்கு சிறுநீரகம் வழங்கியுதவுவீர். உங்கள் நல்மனம் ஒருவருக்கு உயிர் வழங்குகின்றது என்பதை உணர்வீர். இரத்த வகை, 'பீ' நெக்கற்றிவ், 'ஓ' நெக்கற்றிவ், 'ஓ' பொசிற்றிவ் உள்ளவர்கள் முன்வரலாம். உதவும் உங்களை உரியவகையில் உள்ளன்போடு கவனிப்போம்.

தொடர்பு முகவரி:

சு.மகேஸ்வரன்
'மதுரன் கிறாபிக்ஸ்'
(திக்கம் வடிசாலை முன்பாக),
அல்வாய் வடமேற்கு, அல்வாய்.

(22915) (24-14-17)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 26 - 08 - 1921



உதிர்வு 26 - 08 - 2003

## அமரர் அப்பாப்பிள்ளை தியாகராசா

எங்கள் குடும்ப விளக்காகத் திகழ்ந்து 26.08.2003 இல் சிவபதமடைந்த அன்புத் தந்தையாரின் இறுதிக்கிரியையில் நேரில்வந்து கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளைத் தெரிவித்து எமது துக்கத்தில் பங்குகொண்டவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இன்று (24.09.2003) புதன்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம். (22918) (26-24-14-17)

மனைவி,
பிள்ளைகள்.

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 16 - 12 - 1940



உதிர்வு 15 - 09 - 2001

திருமதி
## கோகிலா சோமசுந்தரம் (ஆசிரியை)
திதி: 24-09-2003

அதிர்ச்சி இன்னும் அகலவில்லை.
அதற்குள் ஆண்டிரண்டு ஆகிவிட்டன - அம்மா
ஆசீர்வதியுங்கள் எம்மை, உங்கள்
எண்ணங்களில் நாம் உயிர்வாழ
நீங்கள் கொண்ட நேசம் எம்மீது வைத்த பாசம்
நம்வாழ்விற்கு உரமாகி, உங்கள்
நினைவில் எம்மை வாழ வைக்கும்.

கணவர், மகன், மகள்மார்,
மருமகன், மருமகள்,
பேர்த்தி (ஜயனி).

கரணவாய்,
பருத்தித்துறை.

(22921) (26-24-14-17)

# பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,செப்.24

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய பரிசளிப்பும் 'கற்பகம்' மலர் வெளியீடும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய பொன்னுத்துரை அரங்கில் முதல்வர் சு.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் இ.சிவஞானசுந்தரம், அல்பா சர்வதேச தொலைத்தொடர்பு நிறுவனப் பணிப்பாளர் கே.ரி.கோணேஸ், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மலர் வெளியீட்டுரையை யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் நிகழ்த்தவுள்ளார்.

(ம-10)

# மாடுகளுக்கு தடுப்பூசி

வேலணை,செப்.24

ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்க்கெதிரான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக வேலணை கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

சகல கால்நடை வளர்ப்போரும் கீழ்க்காணும் நிலையங்களுக்குக் குறித்த திகதிகளில் சென்று மாடுகளுக்கு தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாளை முதல் 27 ஆம் திகதி வரையான நாள்களில் அனலைதீவிலும் எழுவைதீவிலும் எதிர்வரும் முதலாம் திகதி கால்நடை வைத்திய உபஅலுவலகம் ஒலுவில் றோட், செபஸ்ரியார் கோவிலடி, சண்முகநாதன் பாடசாலை, பொன்னையா கடைச்சந்தி ஆகிய பகுதிகளிலும் எதிர்வரும் 2 ஆம் திகதி காம்ப் றோட் (*Camp Road*) பகுதிகளிலும், எதிர்வரும் 3 ஆம் திகதி செருக்கன் சந்தி, நாரந்தனை வடக்கு, தபாற்கந்தோர், நாரந்தனை கமநல கேந்திர நிலையம், தம்பாட்டி அம்மன் கோவிலடி ஆகிய பகுதிகளிலும், எதிர்வரும் 4 ஆம் திகதி புளியங்கூடல், சுருவில் பகுதிகளிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-167)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*மக்கள் சேவையை மகிழ்வுடன் ஏற்று*
*பணி புரிந்து பார்போற்ற பதவி உயர்வு*
*(கிராம அலுவலர் தரம் I) பெற்று,*
*நாடிவரும் மக்களுக்கெல்லாம்*
*ஓடி உதவிடும் மாதகல் மேற்கு*
*கிராம அலுவலரும் (J/151)*
*சிறந்த நகைச்சுவைக் கலைஞருமாகிய*
உயர்திரு.

## நடராஜா நாகராஜா

அவர்கள் 05.09.2003 அன்று யாழ். நீதிமன்றில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதை மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் இவரின் மக்கள் பணி சிறந்தோங்க எல்லாம்வல்ல யேசு பதம் வேண்டி நிற்கின்றோம்.

கலைஞானகேசரி
அகஸ்ரீனும்
வளர்மதி கலாலய கலைஞர்களும்
மாதகல்.

(22913) (21-24-14-17)

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

முத்தாக 22 - 10 - 1954



வித்தாக 26 - 09 - 2000

## திருமதி கலைமணி இராசதுரை

அம்மா அம்மா எங்கள் ஆயிருரே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா உந்தன் அன்புக்கு ஈடாகுமா?
ஆசையுடன் எம்மை வளர்த்து
நல்வழியில் வாழ வழிகாட்டி
இன்று தனியே தவிக்கவிட்டு
எங்கு சென்றீர்கள்? ஏனம்மா
ஒருமுறை ஏனும் எங்களைக் காண
ஓடோடி வரமாட்டீர்களா? அம்மா!
எங்களை எல்லாம் ஏங்கித் துடிக்கவிட்டு
ஒரு நொடியில் எங்கே சென்றீர்கள்?
என்றும் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*குடமியன்,*
*வரணி.*

(22914) (26-24-14-17)

பிரிவால் வாடும்:
- குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## சேவியர் யூலன்
(காசாளர், ருவிங்கிள் ஸ்ரார் பேக்கரி)

மண்ணில் 03.11.1946
விண்ணில் 25.08.2003

புனிதப் பணிசெய்து உத்தமராய் இம்மண்ணில்
மனிதருள் திலகமாய் மாண்புடன் திகழ்ந்தீர்!
இனி எங்கு காண்போம் உங்கள் திருமுகத்தை?
ஆத்மா சாந்திபெற ஆண்டவரை வேண்டுகிறோம்!

பிரிவால் துயருறும்:
உரிமையாளர்களும்
ஊழியர்களும்.

ருவிங்கிள் ஸ்ரார் பேக்கரி,
பாண்டியன்தாழ்வு.

உதயன்

# இடைக்கால நிர்வாகத்தின் அவசியம் உணரப்படுகிறது

வடக்கு - கிழக்கில் அவசர மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கு வலுவான இடைக்கால நிர்வாகம் ஒன்று இருக்கவேண்டியதன் அவசியத்தை சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை முக்கிய நான்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சியில் சந்தித்தனர்.

சர்வதேச நாணய நிதியம், ஐ.நா.அபிவிருத்தித் திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகிய நான்கு நிறுவனங்களின் பிரதிநிதிகளே தமிழ்ச்செல்வனை சந்தித்தனர். வடக்கு - கிழக்குக்கு அதிக அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஏன் அவசியம் என்பதை அந்த நான்கு நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் விலாவாரியாக எடுத்துரைத்திருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

"கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசுகள் வடக்கு - கிழக்கிற்கான அபிவிருத்திக்கு என்று குறிப்பிட்டு - கேட்டு - பெருமளவு நிதியை சர்வதேச சமூகத்திடம் பெற்றுக்கொண்டன. ஆனால், அதை முற்று முழுதாகத் தமிழர் தாயகப் பிரதேசத்தை அழிப்பதற்கே அந்த அரசுகள் பயன்படுத்தின. அது பெரிய அச்சமாக இன்னமும் தமிழ் மக்களின் மனதில் பதிந்துள்ளது. எனவே, இனிவரும் காலங்களிலாவது தமிழர் தாயகத்திற்கும் , தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகம் செய்கின்ற உதவிகள், வசதிகள், நிதி என்பன தமிழ் மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் - அவர்களுக்கு நன்மை கிடைப்பதை உறுதிசெய்கின்ற முறையில் - வழங்கப்பட வேண்டும். முழு அதிகாரமும் வலுவும் உடைய ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதன் மூலமே அந்த உறுதி நிலையை ஏற்படுத்தமுடியும்" - என்பதை தமிழ்ச்செல்வன் சர்வதேச நிதிநிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு வெளிப்படையாகவே தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

தமிழ்ச்செல்வனின் விளக்கம், இடைக்கால நிர்வாகத்தின் அவசியத்தை சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மனதார உணர்ந்து கொள்வதற்கு வழி செய்திருக்கின்றது.

தமிழர் தாயகத்தில் ஏற்கனவே இருக்கக்கூடிய கட்டமைப்புகளின் குழப்பமான செயற்பாடுகளையும் பலவீனங்களையும் இந்த சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் அறிந்திருக்கின்றார்கள் என்ற தகவலையும் தமிழ்ச்செல்வன் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தற்போதுள்ள - இத்தகைய - குழப்பமான கட்டமைப்புகள் மூலம் - ஏற்கனவே மோசமான யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்யமுடியாது என்பதையும் சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் உணர்ந்திருப்பது நல்ல சகுனமே.

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் மற்றும் அதன் தொடராக கடந்த 12ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற - உதவும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட - கூட்டம் ஆகியவற்றின் பின்னணியில் நோக்கும்போது வடக்கு - கிழக்கில் வலுவுள்ள இடைக்கால நிர்வாகம் ஒன்று அவசியம் என்பதைத் தாங்கள் உணர்ந்திருப்பதாக இப் பிரதிநிதிகள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

அதுவும் குறிப்பாக மீள்குடியமர்வு, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் போன்ற அவசர - அவசிய- மனிதாபிமான பணிகளை மேற்கொள்வதற்கு இத்தகைய வலுவான அமைப்புத் தேவை என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

இவற்றை நோக்கும்போது, வடக்கு - கிழக்கு நிர்வாகத்துக்கு ஸ்திரமான இடைக்காலக் கட்டமைப்பு ஒன்றை அரசு உருவாக்காத நிலையில், இனியும் வடக்கு - கிழக்கின் பெயரில் - சர்வதேச சமூகத்தை ஏமாற்றி - பெருமளவு நிதியை அரசுத் தரப்பு சூறையாடி விடமுடியாது என்பது ஓரளவு தெளிவாகின்றது.

அதுமட்டுமல்லாமல், சர்வதேச நிதி நிறுவனங்கள் வடக்கு - கிழக்கு நிர்வாகம் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கக்கூடிய உத்தேச தீர்மானங்கள், இது விடயத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்க இலங்கை அரசைத் தூண்டும் என்றும் எதிர்பார்க்கலாம்.

# அரச அலுவலகங்கள், சபைகளில் மனித உரிமை மீறல் அதிகரிப்பா?

## ஐந்து மாதங்களில் 216 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,செப்.24

கூட்டுறவுச் சங்கங்கள், மின்சாரசபை, கல்வித் திணைக்களம் முதலான அலுவலகங்களில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல் குறித்த முறைப்பாடுகள் அண்மைக்காலமாக அதிகளவில் கிடைத்து வருவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக விசாரணை அதிகாரி து.சுரேந்திரன் தெரிவித்தார்.

கடந்த ஐந்து மாதங்களில் இத்தகைய அரச காரியாலயங்களில் இடம்பெற்ற மனித உரிமைமீறல் சம்பந்தமான 216 முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

அரச நியமனங்கள், இடமாற்றங்கள், சம்பள உயர்வு, குற்றப் பணம் அறவிடப்பட்டமை, உயர் அதிகாரிகளின் அழுத்தங்கள், அவமதிப்புக்கள், அதிகார துஷ்பிரயோகங்கள், பக்கச்சார்பான செயற்பாடுகள் போன்ற விடயங்கள் பற்றியே இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் கூட்டுறவுச் சங்கங்கள், கல்வித் திணைக்களங்கள், மின்சாரசபை, சமெந்துக் கூட்டுத்தாபனம், யாழ். செயலகம் போன்ற அலுவலகங்கள் சார்ந்த முறைப்பாடுகளே அதிகம்.

இவை குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழு அதிகாரிகள் சில முறைப்பாடுகளுக்கு தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்துள்ளனர். (ம-12)

# வடமராட்சி கிழக்கில் மணல் அகழும் இடங்கள் அடையாளம் இடப்பட்டன!

வடமராட்சி,செப்.24

வடமராட்சி கிழக்கில் உள்ள மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் மணல் அள்ளுவதற்கென 7 இடங்கள் இனங்காணப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து வருகைதந்த கனியவள அகழ்வுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பீரிஸ், கனிய வள ஆய்வாளர் அனில் த.சில்வா ஆகியோர் யாழ்.அரசாங்க அதிபர் எஸ்.பத்மநாதன், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் எஸ். வேலாயுதபிள்ளை, வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனத் தலைவர் எஸ்.பொன்னம்பலம் ஆகியோர் சகிதம் இப்பகுதிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நேரடியாகச் சென்று மண் அள்ளக்கூடிய இடங்களைப் பார்வையிட்டனர்.

இதனையடுத்து கடலில் இருந்து சுமார் ஆயிரம் மீற்றருக்கு அப்பால் மணல் அள்ளக்கூடிய இடங்கள் மணற்காட்டுக்கும் குடத்தனைக்கும் இடைப்பட்ட பகுதியில் தெரிவுசெய்யப்பட்டு அடையாளமிடப்பட்டன.

கனியவள ஆய்வாளர் அனில் த சில்வா இந்த 7 இடங்களையும் தெரிவுசெய்து அடையாளப்படுத்தினார்.

அடையாளம் இடப்பட்ட இடங்களில் முதலில் 3ஆம், 7ஆம் அடையாளம் இடப்பட்ட பகுதிகளில் இருந்து மணலை அள்ளலாம் எனவும் அவர் ஆலோசனை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமைமுதல் குறிப்பிட்ட இடங்களில் மணல் அள்ளப்பட்டு, விநியோக நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக அனுமதி வழங்கப்பட்ட வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ம-173)

# குடாநாட்டு ஆஸ்பத்திரிகளுக்கு தெற்கிலிருந்து 16 டாக்டர்கள்

தென்மராட்சி,செப்.24

யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளில் கடமையாற்ற தென்னிலங்கையிலிருந்து 16 டாக்டர்கள் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த இந்த டாக்டர்கள் மந்திகை, வல்வெட்டித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, சங்கானை, அச்சுவேலி ஆகிய வைத்தியசாலைகளுக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் பணிமனையினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த டாக்டர்கள் கடமைகளை இன்று பொறுப்பேற்பார்கள் என்றும் -

மேலும் ஒரு தொகுதி டாக்டர்கள் வடபகுதி ஆஸ்பத்திரிகளுக்கு நியமனம் செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த டாக்டர்கள் தமது கடமைகளை பொறுப்பேற்றதும் யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளில் நிலவிவந்த டாக்டர் பற்றாக்குறை ஓரளவு நீங்கிவிடும் என நம்பப்படுகிறது.

தற்போது யாழ். குடாநாட்டில் உள்ள ஓரிரு ஆஸ்பத்திரிகள் தவிர்ந்த ஏனைய ஆஸ்பத்திரிகளில் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும், மீள் நியமனம் வழங்கப்பட்ட வைத்திய அதிகாரிகளும் பொறுப்பதிகாரிகளாக கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-15-117)

# சாவகச்சேரி விறுமர் ஆலயத்தில் வழிபாட்டுக்கு படையினர் அனுமதி

சாவகச்சேரி,செப்.24

தற்பொழுது பூசைகள் எதுவும் நடைபெறாமல் இருக்கும் சாவகச்சேரி விறுமர் ஆலயத்தில் மீண்டும் பூசைகள் ஆரம்பிப்பதற்குப் படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலயம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைந்துள்ளமையால் கடந்த 8 வருடங்களாக அங்கு பூசைகள் நடைபெறவில்லை.

தற்போதைய சமாதான சூழலில் மீண்டும் பூசைகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர் வ.சிவபாதசுந்தரம் அப்பகுதியில் உள்ள படைத் தரப்பினருடன் கலந்துரையாடியதை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு மே மாதம் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் இந்த ஆலயம் சேதமுற்றுள்ளது. 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் சாவகச்சேரி நகரசபை ஊழியர்களால் மாதாமாதம் இவ்வாலயத்தில் பொங்கலிடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆலய வளாகத்தில் மிதிவெடிகளை விரைவில் அகற்றி அங்கு பக்தர்கள் சென்று வழிபடுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தருவதாகவும் படைத்தரப்பு உறுதியளித்துள்ளதாகக் கூறப்பட்டது. (ம-10-31)

**நாளை**

புரட்டாதி 08
வியாழக்கிழமை
(25.09.2003)
திதி : சதுர்த்தசி
முற்பகல் 11.09 வரை
நட்சத்திரம் : பூரம்
பிற்பகல் 1.18 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம்: 7.32 - 9.02
ராகுகாலம்: 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தர பகைவனும் இல்லை.

# அதிகாலை நேரம் ஆசிரியர் மீது சுன்னாகத்தில் கத்திவெட்டு!

வலி.வடக்கு,செப்.24

தனியார் கல்வி நிறுவனத்திற்கு கற்பிப்பதற்காக அதிகாலை 4.30 மணிக்குச் சென்ற ஆசிரியர் ஒருவர் இனந்தெரியாதவர்களின் கத்தி வெட்டுக்கு உள்ளாகினார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சுன்னாகம் மின்சார நிலையத்துக்கு அருகில் மின்சாரம் இல்லாத இடத்தில் இடம்பெற்றுள்ளது.

சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஆசிரியரைத் தள்ளிக் கீழே வீழ்த்திவிட்டு கத்தியால் வெட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது. கையில் வெட்டுக்காயத்துடன் ஓடிவந்து காங்கேசன்துறை வீதியில் உள்ள விடுதலைப் புலிகளின் சுன்னாகம் அரசியல் அலுவலகத்தில் தஞ்சம் அடைந்தார்.

விடுதலைப் புலிகள் உரியவரை தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்ததுடன் உரிய இடத்திற்கு சென்று சைக்கிளையும் மீட்டு வந்து உரியவர்களிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது. (ம-86)

# ஆசிரியர் தின போட்டிக்கான பரிசில் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

ஆசிரியர் தினத்தையொட்டி தமிழீழக் கல்விக் கழகத்தினால் ஆசிரியர்களுக்கு இன்று நடத்தப்படுகின்ற மொழித்திறன் போட்டிக்கான தேசிய மட்டப் பரிசில்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வலய மட்டத்தில் அதிக புள்ளிகளைப் பெறுகின்ற மூவருக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. கடந்த சில வருடங்களாக வடக்கு - கிழக்கில் மட்டும் நடைபெற்றுவந்த இப்பரீட்சை இம்முறை மலையகத்திலும் நடைபெறுகிறது.

இன்று காலை 10 மணிக்கு சகல வலயங்களிலும் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் இரு மணிநேர எழுத்துப் பரீட்சையாக இப்பரீட்சை இடம்பெறும். (ம-10)

# ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.24

சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமிழீழக் கல்விக் கழகத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு கட்டுரைப் போட்டியொன்றினை நடத்தவுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கீழ்க் காணும் பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச ம.வி., புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, வேலணை சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றில் போட்டி நடைபெறும்.

அதிபர்களும், ஆசிரியர்களும் மேற்கண்ட பாடசாலைகளில் ஏதாவதொரு பாடசாலையில் போட்டிக்குத் தோற்றலாம். போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பெறுமதிமிகு பரிசில்கள் ஆசிரியர் தினமான ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி நடத்தப்படவுள்ள ஆசிரியர் தின விழாவில் வைத்து வழங்கப்படும் என சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் க.குமாரசாமி தெரிவித்துள்ளார்.

சமுதாயத்தில் ஆசிரியர்களின் அந்தஸ்து, கல்விக்கு ஏற்பட்ட இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்த ஆசிரியர்கள், சர்வதேச மாற்றங்களுக்கேற்ப ஆசிரியர்கள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் போன்ற தலைப்புகளில் கட்டுரைகள் அமையவுள்ளன.

போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு முறையே 3,000, 2,000, 1,000 ரூபாவும் வலய மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் மூவருக்கு தலா 500 ரூபாவும் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ம-10)

# பொங்கு தமிழில் மாபெரும் கலை நிகழ்வு

வவுனியா,செப்.24

வவுனியாவில் இன்று நடைபெற வுள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வில் மாபெரும் கலைநிகழ்வு ஒன்று நடத்தப்படவிருக்கின்றது என்று ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவிக்கின்ற னர்.

வவுனியாவில் உள்ள சுமார் 200இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் ஒன்றிணைந்து இந்த நிகழ்வினை நடத்தவுள்ளனர். மேலும் தமிழரின் கலை, கலாசாரம், பாரம்பரியம் என்பவற்றினை வெளிக்கொணரும் வகையில் இந்த நிகழ்வு அமைய இருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரி வித்தனர். (ம)

### கைதடி, நாவற்குழி சுற்றிவளைப்பின்போது

# காணாமற் போனோரின் உறவினர்களுக்கு அழைப்பு

கைதடி மற்றும் நாவற்குழிப் பகுதிகளில் 1996 -1997ஆம் ஆண்டுக காலப் பகுதியில இடம்பெற்ற சுற்றி வளைப்பின்போது படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனவர்களின் உறவினர்களை உடனடியாக படையினரால் கைது செய்யப்பட்டுக் காணமற்போனோ ரின் பாதுகாவலர் சங்கச் செயலாளரைச சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி சுற்றிவளைப்பின் போது காணாமற் போனவர்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய் யப்படவுள்ள வழக்குப் பத்திரத்தில் கையொப்பம் இடுவதற்காக இவர்கள அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

குறிப்பிட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு காணாமற்போன வர்களாகிய பொன்னர் நவீந்திரன், முருகன் சிவராசா, இராமநாதன் அன்ன லிங்கம், சிதம்பரப்பிள்ளை பேரின்ப நாதன், கோபாலசிங்கம் அம்பிகை பாலன், கனேஷ் ரமேஸ், முருகன் ஜெயரட்ணம், சினத்தம்பி சிவகுமார், தர்மலிங்கம் சுவிந்திரராஜா ஆகியோ ரின் உறவினர்களுக்கு மேற்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ)

# இடைக்கால நிர்வாக அலகு தொடர்பாக விளக்கும் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு

## அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கருத்து

கொழும்பு,செப்.24

புலிகளுடன் அரசு இதுவரை முக்கிய இணக்கங்கள் எதனையும் காணவில்லை. புலிகள் எதனைக் கேட்கிறார்கள் என அரசுக்குத் தெரி யாது. அரசு எதனைக் கொடுக்கத் தயாராக இருக்கிறது என்பதும் வெளிப் படையாகத் தெரியாது. இவ்வாறிருக் கையில் அரசு நாட்டை இரண்டாகப் பிரிக்கின்றது. புலிகளுக்கு நாட்டைத் தாரைவார்க்கிறது என சிலர் தமது அரசியல் நலன்களுக்காகக் கோஷ மிடுவது மீண்டும் ஒரு யுத்தத்துக்கே வழி வகுக்கும்.

- இவ்வாற கல்வி, மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியில நடத்தப்பட்ட சமாதானம் தொடர்பான போஸ்டர் சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக் கிழமை இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இங்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக ஐரோப்பிய யூனியனின் மனிதவள அபி விருத்தி தொடர்பான ஆலோசகர் மாரியன் ஹீமாயன் கலந்துகொண்டார்.

இந்தப் போஸ்டர் சித்திரப் போட் டிகள் இருபிரிவுகளாக நடத்தப்பட் டன. பாடசாலை மட்டப் போட்டி, திறந்த போட்டி என நடந்தது. வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் 21 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் இந்தப போட்டியில் கலந்துகொண்டனர். மாவட்ட தேசிய மட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர் களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இங்கு அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் தெரிவித்த தாவது:-

சமாதானத்தைக் குழப்ப நினைப் பவர்கள் எம் மத்தியில் இருக்கிறார் கள். இவர்கள் யுத்தத்தின் மூலம் இலாபமடைபவர்கள் சமாதானத்தின் மீது விருப்பம் உள்ளவர்களும், சமஷ்டி, இடைக்கால நிர்வாக சபைக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இதற்கு காரணம் அவர்களுக்கு இவை தொடர் பான விளக்கமில்லாமையே.

இந்திய - இலங்கை ஒப்பந்தத் தையும் அதற்கு முன் செய்யப் பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங் களையும் மக்கள் சரியாக விளங்கிக கொள்ளாமையே 20 வருட கால குரூர யுத்தத்துக்கு வழிவகுத்தது. இனியும் அவ்வாறான ஒரு நிலை ஏற்படா திருக்க வேண்டுமானால் இந்த சமஷ்டி மற்றும் இடைக்கால நிர்வாகம் போன றவை தொடர்பாக மக்களுக்கு தெளிவு படுத்தவேண்டும். இதற்குரிய பாரிய பொறுப்பு ஊடகங்களுக்குரியது.

சமாதானம் என்பது இலகுவாகக் கிடைத்துவிடாது. சமாதானத்தைக் கொண்டுவர வேண்டியது அரசியல் வாதிகளின் பொறுப்பு என ஏனைய வர்கள் சும்மா இருக்கக்கூடாது. அரச சார்பற்ற நிறுவனங்கள், ஏனைய பொது அமைப்புக்கள், பொதுமக்கள் என அனைவரும் பாடுபட வேண்டும். உண்மையான ஜனநாயகம் என்பது அனைவரது கருத்துக்களையும் கேட்டு, அனைத்து இன மக்களினதும் உரிமை களுக்கு மதிப்பளித்து வாழ்வதேயாகும்.

இவ்வாறு அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் தெரிவித்தார்.


## எட்டாம் ஆண்டு நினைவு மலர்



| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 04 - 09 - 1984 | 22 - 09 - 1995 |

**செல்வி தவராசா துஷ்யந்தினி (துஷி)**

(யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவி)

திதி: திரயோதசி 24-09-2003

பாசத்தோடு எம்முடன் வளர்ந்த துஷி - நீ
திலீபன் நினைவுநாளில் பலாலி ஷெல்லிற்கு இலக்காகி - எமை
உன்னையும் நினைக்க வைத்துவிட்டாய் - ஆண்டுகள்
எட்டுச் சென்றாலும் அழியாது உன்நினைவுகள்!

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
அண்ணா, அக்காமார்,
தம்பி, உறவினர்கள்.

பிராமணர் வீதி,
தும்பளை,
பருத்தித்துறை.

(22880) (21-14)



## எம் இதயத்தின் நீங்காத நினைவில்
## எம்முடன் அப்பா... ஆண்டு ஒன்று



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 14 - 05 - 1938 | 05 - 10 - 2002 |

**அமரர் நாகலிங்கம் பூபாலராஜா**

திதி: 24-09-2003

*காற்றாகி பறந்து சென்றதப்பா ஓராண்டு*
*இன்னும் எந்தன் காதில் எதிரொலிக்கிறது உங்களினது பேச்சுக்குரல்*
*'அப்பா' என்று அரற்றும் எங்கள் இதயங்கள் ஆறவில்லை*
*ஆயிரம் உறவுகள் இருந்தென்ன*
*ஆலமரமாய் நீங்கள் இருக்க அதன் விழுதுகளாய் நாம் இருந்தோம்*
*ஆலமரமும் சாய்ந்தது; ஆனந்தமும் பறிபோனது*
*எம் கவலைகள் தீர வழி தேடுகின்றோம்.*
*இதுவரை எம்முடன் வாழ்ந்து வந்த அப்பாவாகிய அந்த நூபம்*
*எம்முடன் அணையாத தீபமாய் ஒளிர்விட்டுப் பிரகாசிக்கிறீர்களப்பா*
*விண்ணில் உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கும்:*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி,
பாசப்பிள்ளைகள்.

மானிப்பாய்.

தகவல்:
ஷகி பிரான்ஸ் *(மகள்)* (22739) (19-21-14)



## தேவை

தென்மராட்சி பிரதேசத்தில் இசைக்குழு ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதால் ஆர்வமுள்ள பாடகர், பாடகி மற்றும் வாத்தியக் கலைஞர்கள் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**சி.ஜோன்சன் (இயக்குநர்)**
டச்சு வீதி,
சாவகச்சேரி.

(சி-30315) (21-14)



## நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவலைகள்



| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 22 - 04 - 1931 | 05 - 10 - 2002 |

**அமரர் சிவசுப்பிரமணியம் மூத்ததம்பி (RMO)**

திதி: 24-09-2003

அன்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் எம்மை
நல்வழிப்படுத்திய
எமதன்பு அப்பாவே!
ஆண்டு ஒன்று போனாலும்
ஆறாது எம் துயரம்
என்றென்றும் உங்கள் நினைவுகள்
நெஞ்சை விட்டகலாது!

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கேமாவாசா,
8ஆம் கட்டையடி,
தெல்லிப்பழை.

(22906)(21-14)



கணனியில் எழுத்துக்கள்
வியாபார சின்னங்கள்
வடிவமைத்து
றபர் ஸ்ராம்ப் செய்து
கொள்ள நாட
வேண்டிய இடம்.

WITHIN ONE HOUR NYLON STAMPS
By Computerized words in all languages with the TRADE MARK of your firm
Pillaiyar press, nallur

**பிள்ளையார் அச்சகம், நல்லூர். T.P. 222 6722**



## விற்பனைக்கு

தச்சுவேலை செய்யும் சைனா மெசின்கள் 10",12",14",16" ஆகியனவும் மின்சார ரில்லர்கள், அலுமினிய கட்டிங்மெசின், டிசைன் சீவும் றவுட்டர்கள், ஜெனரேட்டர்கள், வெல்டிங் பிளான்ற் இவற்றுக்கான உதிரிப்பாகங்களும் வேறு வகையான மின்சார சாதனங்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
கி. சுதாகரன்
இல.20, இரண்டாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(21-14) (C-30297)



## ஆறாத்துயருடன் ஓராண்டு நிறைவு

அமரர்
**சிவகுரு நடராசா**

திதி: 24-09-2003 (சதுர்த்தசி)



தோற்றம் 25-10-1923 — மறைவு 05-10-2002

*ஆண்டு ஒன்றாயிடினும்*
*தேறாத மனத்துடன் தேம்பி அழும் உம் உறவை*
*– தேற்றவருவீரோ?*
*பாரதனை நீங்கி பரமனடி சேர்ந்தாலும் பாரீர்*
*– எம் பரிதவிப்பை*
*நீர் பெருகிய விழிகளொடு நீர் எம்மைப் பிரிந்தீர்*
*எப்படி அதை மறப்போம்?*
*என்றும் எண்ணிக் கலங்குகிறோம்*
*எம் இனிய பப்பாவே!*

அன்புடனும் பாசத்துடனும் எம்மை அரவணைத்துக்
காத்திட்ட அன்புத் தெய்வத்தின்
*ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்:*

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

பழைய விதானையார் வளவு,
வல்வெட்டி.

(சி-30317) (21-14)

# இடைக்கால நிர்வாக வரைபை அரசு ஏற்றாலும் விட்டாலும் வெற்றி நமக்கே!

## அரசியல்துறை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் உரை



இளம்பரிதி

உலக நாடுகளில் இருக்கின்ற நடைமுறைகளை உள்ளடக்கி ஜன நாயக முறையிலும் பொருத்தப்பாடான நடைமுறை யதார்த்தமாக நடந்து கொண்டிருக்கின்ற செயன்முறை என்ற அடிப்படையிலும் எல்லோரும் ஏற்றுக் கொண்ட, வரவேற்றிருக்கின்ற விட யத்தையும் தான் நாம் எமது இடைக் கால நிர்வாக கட்டமைப்பு வரைபில் உள்ளடக்கி வைத்திருக்கின்றோம். அரசுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள இவ் வரைபினை அரசு ஏற்றுக்கொண்டா லும் சரி நிராகரித்தாலும் சரி வெற்றி எமக்கே.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாண அரசியல்துறைப் பொறுப் பாளர் இளம்பரிதி.

ஆனைப்பந்தி இந்து குருமார் குருகுல மண்டபத்தில் இந்து குரு மார்களுடனான கலந்துரையாடலின் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்து குருமார் ஒன்றியத் தலைவர் பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் இளம்பரிதி மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழர் தாயகம் விவசாய வளங்களைக் கொண்டிருக் கிறது. கடல் வளம் இருக்கிறது. ஆனால், கடல்துறையில் நாம் வளர்ச்சி பெறவில்லை. விவசாயத் தில் வளம் இருக்கிறது. வளர்ச்சி பெற் றிருக்கிறோம்; ஆனால் அபிவிருத்தி அடையவில்லை.

விவசாயத்திலும் கடல் வளத்தி லும் வளர்ச்சிகண்டு அபிவிருத்தி அடையவேண்டுமானால் அவற்றில் தொழில்நுட்பங்கள் மேலும் புகுத்தப் பட வேண்டும். உற்பத்திப் பொறி முறைகள் அதிகரிக்கப்படவேண்டும். விவசாயத்தில் வளர்ச்சிபெற்ற நாம் கைத்தொழிலிலும் வளர்ச்சிபெற வேண்டும்.

ஒருநாட்டின் அபிவிருத்தி என் பது அந்த நாட்டில் வாழும் சமூகத் தின் ஒழுக்கம், பண்பு போன்றவற் றில் தங்கியுள்ளது. சிங்கப்பூர் அபி விருத்தி அடையக்காரணம், அங்கு ஒழுங்கும் பண்பும் அதிகம் காணப்பட் டமைதான். எமது சமூகத்தில் நிறைந் துள்ள ஒழுக்கம், பண்பு என்பவற்றைச் சிலர் கெடுக்க நினைக்கிறார்கள்.

வறிய மக்களின் வருமான வளர்ச்சி வீதம் அதிகரிக்கப்படாமல் நாட்டில் வளர்ச்சி ஏற்படாது. வடக்கு - கிழக் கில் வருடாந்தம் 18 ஆயிரம் மாணவர் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகிறார் கள். இதில் 800 பேர் மட்டுமே பல் கலைக்கழகத்திற்குத் தெரிவாகின்றனர்.

வருடந்தோறும் வெளியேறும் பட்டதாரிகளில் அரைவாசிப்பேருக்கு ஸ்ரீலங்கா அரசால் வேலைவாய்ப்பை வழங்கமுடியவில்லை. ஏனெனில், அதன் பொருளாதாரக் கொள்ளளவு அந்தளவுதான்.

**தொகுப்பு: வி.பி.சர்மா**
**வலி.மேற்கு செய்தியாளர்**

உயர்கல்வி பெறத்தகுதி பெற்ற தமிழ் மாணவருக்குப் பல்கலைக்கழ கம் செல்லும் வாய்ப்பையும் இந்த அரசால் பெற்றுத்தரமுடியாது. தொழில்வாய்ப்பைத் தரமுடியாது. அதற்கு இந்தத் திறைசேரியில் இட மில்லை. எனவே, உயர்கல்வி பெற வும் தொழில்வாய்ப்பைப் பெறவும் எமக்கென்றொரு நாடு வேண்டும்.

### நாடும் அரசியலும்

நாடு என்பது ஒவ்வொருவர் வாழ்க் கையிலும் முதன்மையானது. அதனை அமைப்பது எமது எல்லோருடைய பங்குமாகும்.

அரசியல் என்பது எமது பிறப்பு ரிமை. அதில் நாம் வலிமை இல்லா மல் இருப்பின் எம்மால் வாழமுடி யாது. அரசியல் உரிமை பற்றிச் சிந் திக்காமல் மானிட மேன்மையை நாம் காணமுடியாது. அரசியல் மறுக்கப்ப டும் போது நாம் போராட வேண்டும்.

கண்ணை நாம் இழக்காதிருப் பதுபோல மண்ணையும் நாம் இழக் காதிருக்கவேண்டும். இது எமது வாழ்க் கையின் முதல்பணி. அந்த அடிப்படை யில் நாம் விடுதலை பெற்றேயாக வேண்டும். விடுதலைக்காக நாம் இணைந்து செயற்படும்போது - எதிரி யின் வலையை அறுக்கின்றபோது - எமது வாழ்க்கையின் மேன்மை யை யாராலும் தடுக்கமுடியாது.

### அரசியலும் தலைவர்களும்

சில தலைவர்கள் குத்துக்கரணம் போட்டாலும் மக்கள் அரசியல் தெளி வோடு இருக்கிறார்கள். உலகத்தை இன்று வழிநடத்துவது பொருளாதாரம். பொருளாதாரத்துக்குப் பக்கபலமாக இருப்பது இராணுவமும் அரசியலும்.

எமது போராட்டத்தை மக்களும், நட்புறவு சக்திகளுமே இயக்கிக்கொண் டிருக்கின்றன. மக்கள்தான் போராட் டத்திற்கு அடித்தளம்; சக்தி, ஆதாரம்.

சந்திரிகாவும், லக்ஷ்மன் கதிர் காமரும் இராணுவ பாதுகாப்புச் செல வுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட கூடுத லான நிதியை சர்வதேச சக்திகள் கையாள்வதற்கு - வெளியுலகிற்கான செயற்பாடுகளுக்கு - ஒதுக்கியிருந்தனர்.

புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் காட்டி சர்வதேச சமூகத்திடம் இருந்து தனிமைப்படுத்துகின்றபோது புலிகள் தோற்கடிக்கப்படுவார்கள் என நினைத்து அவர்கள் செயற்பட்டார்கள. ஆனால், இன்று அவர்கள் சர்வதேச ரீதியாக ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள். இதிலிருந்து இனி மாற்றத்தை ஏற்படுத் துவது கஷ்டம்.

### இடைக்கால நிர்வாக அலகு

அரசால் சமர்ப்பிக்கப்பட்ட நிர்வாக வரைவு சர்வதேச சட்டவல்லுநர் முன் னிலையில் ஆராயப்பட்டு தலைவர் பார்வைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசிடம் விரைவில் கையளிக்கப் படவுள்ள இந்த வரைபை அரசால் புறந்தள்ளமுடியாது. இலங்கைத் தமி ழர் பிரச்சினைக்கு அதி உச்சமான தீர்வை இலங்கை அரசு வழங்கவேண் டும் என்று அமெரிக்காவின் ராஜாங் கப் பிரதிநிதி ஆமிடேஜ் கூறியுள்ளார்.

நாம் முன்வைத்திருப்பது அதி குறைந்த ஓர் இடைக்காலத் திட்டமே. எனவே, இதனை அரசு வழங்கினால் - இடைக்கால நிர்வாகம் ஒன்று கிடைக் குமானால் - நாங்கள் பக்கச்சார்பற்ற முறையில், ஏற்றத்தாழ்வற்ற முறை யில் தேவைக்கேற்ப அவற்றைச் செயற்படுத்தி ஒட்டுமொத்தமாக சமத் துவமான முறையில் எல்லா மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் கட்டியெ ழுப்பமுடியும் என எதிர்பார்க்கிறோம்.

இடைக்கால நிர்வாகம் வழங்கப் படாவிட்டால் - குறைந்தபட்ச கோரிக் கைகளைக்கூட சிங்கள தேசம் வழங்க முன்வரவில்லை என்றால் - அது சர்வ தேச ரீதியில் ஒரு சாதாரண விடய மாக இருக்கமுடியாது. எமது கோரிக் கைகள் ஏற்கப்படாவிடின் எமது விட யம் சர்வதேச ரீதியில் வலுப்பெறும்; நியாயப்படுத்தப்படும்.

"ஓர் அரசு தமக்குள் இருக்கிற மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப் பதற்கு அந்தநாட்டு அரசியல் சட்ட அமைப்பு இடைஞ்சலாக இருக்குமே யானால் - தடையாக இருக்குமே யானால் - அந்த இனம் அப்படியே தனித் துப்போக விட்டுவிடவேண்டும்; அவர் களுடைய அரசியல் விதியை அவர் களே நிர்ணயித்துக்கொள்ள வழிவிட வேண்டும்" என்பது 1920 ஆம் ஆண்டு சர்வதேச சட்டவாளர் ஆணைக்குழு வின் தீர்மானம்.

இதனை சர்வதேசத்திடம் கூறி நாம் நியாயம் கேட்போம். அப்போது இலங்கை அரசுக்கு நெருக்கடிகள் கொடுக்கப்படலாம். எனவே, எமது இடைக்கால அமைப்பை அரசு வழங்கி னாலும்சரி, வழங்காவிட்டாலும்சரி வெற்றி எமக்கே.

எமக்கென்று ஓர் அடித்தளம் இருந் தால் எம்மை யாரும் அசைக்கமுடி யாது. அந்தணர்கள் தமது எதிர்காலத் தைப் பலப்படுத்த, வளர்ச்சிபெற அவர் களுக்கு ஓர் அடித்தளம் வேண்டும்.

### புலிகளின் ஆட்சியில

புலிகள் ஆட்சிக்கு வந்தால் அந்த ஆட்சி எப்படி இருக்கும் எனப் பலர் கேட்கிறார்கள். நாம் எத்தனை பேர் விடுதலைபெற்ற மண்ணில் இருப் போம் எனக் கூறமுடியாது. ஆட்சி எப்படி இருக்கும் என்றும் இப்போது கூறமுடியாது. ஆனால், ஒன்று நிச்ச யம். எமது ஆட்சியில் மகிழ்ச்சி இருக்கும். அந்த மகிழ்ச்சிதான் எங் களுடைய வாழ்க்கையின் எதிர்பார்ப்பு. ஆட்சி எப்படி இருக்குமென அறுதி யிட்டுக் கூறமுடியாது. இருப்பினும், மகிழ்ச்சி இருக்கும்; மானிட மேன்மை இருக்கும்; ஒருவரை ஒருவர் மதிக் கின்ற நிலை இருக்கும்; ஒழுக்கம், பண்பு, வளர்ச்சி, வருமானம், நாக ரிகம் என்பன நிறைந்திருக்கும் - என்றார்.



வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபி விருத்திச் சபை நெடுந்தீவில் நடத்திய இலவச வைத்தியமுகாமில் ஆழியவளை திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் செல்வி ஈழவாணி வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# வான் தாக்குதலில் உயிரிழந்த 20 மாணவரின் நினைவு நிகழ்வு

## வடமராட்சியில் நடந்தது

யாழ்ப்பாணம்,செப்.24

1995ஆம் ஆண்டு நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது நடத் தப்பட்ட விமானக் குண்டுவீச்சில் உயி ரிழந்த 20 மாணவர்களின் 8ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு புலோலி மகா வித்தியாலயத்தில் இயங் கும் நாகர்கோவில் மகாவித்தியாலயத் தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் என்.மகேந் திரன் தலைமையில் நடைபெற்ற இந் நினைவு நிகழ்வில் பொது ஈகச்சுட ரினை வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் தனயன் ஏற்றினார். தமி ழீழத் தேசியக் கொடியை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. தயா ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து அகவணக் கம், மலரஞ்சலி என்பன இடம்பெற் றன. விமானக் குண்டுவீச்சில் உயிரி ழந்த மாணவர்களின் திருவுருவப் படங்களுக்கு அவர்களின் பெற்றோர் களும், உறவினர்களும் கண்ணீர் மல்க மலரஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நினைவஞ்சலி உரைகளை விடுத லைப் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த அமிதாப், யாழ். மாவட்ட கல் விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன், வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், யாழ். பல்கலைக் கழக புவியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி குகைஆனந்தன் உட்பட பலர் நிகழ்த்தினர்.

(ஓ-5-173)

### கசிப்பு வைத்திருந்த இருவருக்கு ரூ.24 ஆயிரம் அபராதம்

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட் டின் பேரில் பொலிஸாரால் கைது செய் யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ள இருவருக்கு 24 ஆயி ரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

மடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விமலசிறி கமில்டா மற்றும் ஓட்டுமடத்தைச் சேர்ந்த தியாகராசா கனகராசா ஆகிய இருவரையுமே தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பண மும் தலா 2 ஆயிரம் ரூபா தர்மப் பண மும் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தர விட்டார்.

இதேவேளை, சட்ட விரோதமாக சாராயம் விற்பனை செய்த மூன்று பேருக்கு யாழ். நீதிமன்றம் 12 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்துள்ளது.

ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த நாகராசா பத்மராசா, தாவடி வடக்கு, கொக்குவிலைச் சேர்ந்த இராசரத்தினம் இராசலிங் கம் மற்றும் மானிப்பாய் வீதி, யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த சிவகுரு முகு கானந்தன் ஆகிய மூவரையும் தலா 2 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், தலா 2 ஆயிரம் ரூபா தர்மப் பண மும் செலுத்துமாறு - நீதிவான் உத் தரவிட்டார். (ம-5)

### மாலைதீவு சிறையில் காயப்பட்ட ஒருவர் உயிரிழப்பு

மாலைதீவுச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தினை அடுத்து கொழும்பு தனியார் வைத் தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டிருந்த மாலைதீவைச் சேர்ந்த ஒருவர் கடந்த திங்கட்கிழமை நண் பகல் உயிரிழந்தார்.

அவர் உயிரிழந்ததை வைத்திய சாலை அதிகாரிகள் உறுதிப்படுத்தி யிருப்பதாக நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.பி.ரோஹ தாஸ தெரிவித்துள்ளார்.

மாலைதீவு சிறைச்சாலையில் கடந்த 19 மற்றும் 20 ஆம் திகதிக ளில் இடம்பெற்ற மோதல் சம்பவங் களில் காயமடைந்த 8 பேர் விமா னம் மூலம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு வைத்தியசாலையில் சிகிச் சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவரே உயிரிழந் திருப்பதாகவும் - ஏனையோர் தொடர் ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

## எழுத்து மூலம் உறுதியளித்து

# ஈழத்தைக் கைவிட்டால் புலிகளுக்கு சில அதிகாரங்களை வழங்கலாம்!

## இப்படிக் கூறுகிறார் ஜனாதிபதி குமாரதுங்க



கொழும்பு,செப்.24

விடுதலைப் புலிகள் ஈழக் கோரிக் கையைக் கைவிட்டு, நாட்டைப் பிளவு படுத்தாதிருக்க உறுதியளிப்பார்களே யானால் அவர்களுக்கு ஒரு சில அதி காரங்களை வழங்குவதில் தவறு இல்லை யென்று ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க கூறுகிறார். விடுதலைப் புலிகள் இந்த உறுதிமொழியை எழுத்து மூலம் வழங்கவேண்டும் என்றும் ஜனாதிபதி கோருகிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பண்டார கமையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி யின் பிரசாரக் கூட்டமொன்றில் உரை யாற்றுகையிலேயே ஜனாதிபதி இவற் றைத் தெரிவித்தார்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஜன நாயக கோட்பாடுகளுக்கு எதிராக தான் செயற்படப்போவதில்லை என்றும், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பைக் கொண்டு நடத்தக் கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்பதால் தனது நிறை வேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தவில்லை என்றும் ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

அமைச்சர்கள் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களைப் பார்வையிடு வதற்கும் அறிக்கைகளைக் கோருவதற்கும் எனக்கு உரிமை இருக்கின் றது. இருந்தாலும் அமைச்சர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் எனக் கவனித்துக்கொண்டிருக்கின்றேன். யார் சிபாரிசு செய்தாலும் எனக் குத் தேவையான அமைச்சரொருவரை நியமிக்கும் அதிகாரம் எனக்கு இருக்கின்றது.

அமைச்சரவையில் தவறான ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. நான் இது குறித்து வாயைத் திறப்பதில்லை. நான் எதற்காக கேள்வி எழுப்பவேண்டும்? இவர்கள் சேவை செய்ய முடியுமென்பதால் அவர்களை மக்கள் அதிகாரத்தில் அமர்த்தியுள்ளனர். இப்போது இவர்கள் சேவை செய்து பார்க்கட்டும்.

ஜே.வி.பியினருக்கும் அழைப்பு விடுத்து நாட்டைப் பற்றிச் சிந்திக்கும் கட்சியினருடன் பரவலான கூட்டணியொன்றை விரைவில் அமைத்து மக்களுக்கு நெருங்கிய அரசொன்றை அமைப்போம். இன்றைய அரசாங்கத் தில் அங்கம் வகிக்கும் அனைவரும் கோமாளிகள்.

நாங்கள் நிதியைப் பெற்று ஆரம்பித்த குக்குலேகங்க மின்சாரத் திட் டத்தை ரணில் விக்கிரமசிங்க திறந்துவைத்துவிட்டு வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார். அவர் 65 ஆவது முறையாகவே வெளிநாடு சென்றுள்ளார். எனது காலத்தில் இரண்டு அல்லது மூன்று முறைதான் நான் வெளிநாடு சென்றுள்ளேன் - இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

# தமிழ் மக்களுக்கு உள்ள உரிமைகள் முஸ்லிம்களுக்கும் கிடைக்கவேண்டும்

## தலைவர் பிரபா அதில் உறுதியாக உள்ளார் என்கிறார் கௌசல்யன்

ஆரையம்பதி,செப்.24

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை வந்திருந்த பல்வேறு ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் அண்மையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான கொக்கட்டிச்சோலைக்குச் சென்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யனைச் சந்தித்து உரையாடினர்.

அங்கு ஊடகவியலாளர் கேட்ட கேள்விகளுக்கு கௌஸ்சயன் பதிலளித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலான பிரச்சினை தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்டபோது கௌசல்யன் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் புவியியல் ரீதியாக இணைந்து வாழவேண்டிய தேவை உள்ளது. தமிழ் மக்களுக்குரிய உரிமைகள் முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்கவேண்டும். இந்த விடயத்தில் எமது தலைவர் பிரபாகரன் உறுதியாக இருக்கிறார்.

யுத்த சூழ்நிலை காரணமாக எமது பகுதிகளுக்கு வந்து வியாபாரம் செய்யமுடியாத நிலையிலிருந்த முஸ்லிம்கள் இப்பொழுது எமது பகுதிகளில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்களும் முஸ்லிம் வியாபாரிகளிடமிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்கின்றனர். முஸ்லிம்கள் தமது நெல் வயல்களில் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் இரு சமூகத்தவர்களுக்குமிடையில் ஏற்பட்ட விரிசல் தற்போது இல்லை. இரு சமூகங்களுக்குமிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அண்மையில் கண்காணிப்புக்குழு முன்னிலையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் குழு எங்களைச் சந்தித்தது. அப்போது இரு இனங்களுக்கிடையேயும் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. திடீரென ஏற்படும் பிரச்சினைகளுக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கு உடன்பாடும் காணப்பட்டது.

- என்று அவர் பதிலளித்தார்.

மேலும் இச்சந்திப்பில் ஜே.வி.பியின் பற்றிக் கேட்டபோது கௌசல்யன் கூறியதாவது:-

அவர்களுடன் எம்மை ஒப்பிடவேண்டாம். நாம் இன விடுதலைக்காகப் போராடுகின்றோம். அவர்களின் கொள்கை என்னவென்பது எமக்குத் தெரியாது - என்று கூறினார்.

மேலும் இனப்பிரச்சினைக்கு தீர்வினை ஏற்படுத்த உதவும் வகையிலான செய்திகளை ஊடகங்கள் வெளியிட வேண்டுமென்றும், திரிவுபடுத்தாமல் நடுநிலைச் செய்திகளை வழங்க வேண்டுமென்றும் ஊடகவியலாளர்களைக் கேட்டுக்கொண்டார். (ம)

### புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய

# இந்திய அமைச்சரை கைதுசெய்ய தமிழக முதல்வர் பிரயத்தனம்

சென்னை,செப்.24

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய இந்திய மத்திய அமைச்சர் கண்ணப்பனை கைதுசெய்வதற்காக அவரை பதவியிலிருந்து விடுவிக்கவேண்டுமென்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசைக் கோரியிருப்பதாக தமிழக பத்திரிகையான தினமலர் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக முதல்வா இந்தியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளதாக அப்பத்திரிகை கூறுகிறது.

இந்திய மத்திய அமைச்சரும் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி நிர்வாகியுமான கண்ணப்பன் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியுள்ளார். அதனால் கைதுசெய்யப்பட வேண்டியவராவார். அதற்காக அவரை மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விடுவிக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழக முதல்வர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளாராம். (ஒ-9)

# திருகோணமலை ஆண்டான்குளத்தில் புலி முகாம் இல்லையென்றார் பீடாதிபதி!

## உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,செப்.24

திருகோணமலை ஆண்டான்குளத்தில் விடுதலைப் புலிகளின் முகாம் இல்லை என்று கூறுகிறார் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே.

ஜனாதிபதியும் அவரது ஆலோசகரும் மற்றும் அவரது கட்சியின் பேச்சாளர்களும் கூறுவதுபோல் தலைநகரிலோ அல்லது கிழக்கு மாகாணத்திலோ புலிகளின் அச்சுறுத்தல்கள் இல்லை என்றும் அவர் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

எதிர்க்கட்சியினரின் பிரசாரங்களை முற்றாக நிராகரித்த அமைச்சர், இலங்கைக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முன்னெடுப்புக்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஒரு சதியே அவை என்றும் குறிப்பிட்டார்.

உல்லாசப் பிரயாணத்துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாட்டை அமைச்சர் நடத்தினார்.

அமைச்சர் காமினி லொக்குகே மேலும் கூறியதாவது:-

அரசும், புலிகளும் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையினால் நாம் எதிர்பார்க்காத அளவு உல்லாசப் பிரயாணத்துறை முன்னேற்றம் அடைந்துள்ளது. சென்ற ஆண்டில் மட்டும் நான்கு லட்சம் உல்லாசப் பயணிகள் இங்கு வந்துள்ளனர். அடுத்த ஆண்டில் இத்தொகை ஐந்து லட்சமாக அதிகரிக்கக் கூடியவாய்ப்புகள் உள்ளன.

ஐரோப்பிய நாடுகளுடன் சார்க் நாடுகளிலும் இருந்து பெரும் எண்ணிக்கையில் உல்லாசப் பயணிகள் வந்துள்ளனர். ஆகக்கூடுதலாக இந்தியாவிலிருந்து கடந்த ஆண்டு 76ஆயிரம் பேர் வந்தனர்.

நான் கடந்த இரண்டு தினங்களாக திருகோணமலையில் தங்கியிருந்து பல பாகங்களுக்கும் சென்று வந்தேன். ஆண்டான்குளம் என்ற இடத்தில் புலிகள் புதிதாக முகாமிட்டுள்ளனர் என்று எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர்.

இதில் எந்த உண்மையும் இல்லை. நான் ஆண்டான்குளம் விகாரைக்குச் சென்று பீடாதிபதியையும் சந்தித்தேன். அங்கு அப்படி எந்தவொரு முகாமும் இல்லை என்று பீடாதிபதியே கூறினார்.

- இவ்வாறு அமைச்சர் கூறினார்.

### வெருகல் காட்டுப் பகுதியில்

# புலிகளின் காவல்துறையிடம் 500 கிலோ கஞ்சா சிக்கியது!

திருகோணமலை - வெருகல் பிரதேசத்தைச் சேர்ந்த காட்டுப்பகுதியில் சுமார் 500 கிலோ எடையுள்ள கஞ்சா பொதிகளை விடுதலைப் புலிகளின் காவல்துறையினர் கண்டுபிடித்துக் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான இக்கஞ்சா பொதிகள் விற்பனைக்குக் கொண்டு செல்வதற்காக அவ்விடத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று மாவட்டக் காவல்துறை மேற்பார்வையாளர் தமிழரசன் தெரிவித்தார்.

அதனுடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் நால்வர் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இவர்களின் வழக்கு, எதிர்வரும் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தமிழரசன் கூறினார்.

கடந்த 19ஆம் திகதி சம்பூருக்கு விஜயம் செய்திருந்த திருகோணமலை மாவட்ட தமிழ், சிங்கள ஊடகவியலாளர் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகளைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதுபோன்ற சட்டவிரோத செயல்களைத் தடை செய்வதில் காவல்துறையினர் மிகுந்த அக்கறை காட்டிவருவதாகவும், சிவில் குற்றவியல் முறைப்பாடுகளை தாம் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாகவும் தமிழரசன் தெரிவித்தார்.

# புரிந்துணர்வு ஒப்பந்தப் பலாபலன்கள் உரியமுறையில் சென்றடையவேண்டும்

## அரசின் நோக்கம் பற்றி அமைச்சர் அத்தநாயக்க

"புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பலாபலன்கள் உரியமுறையில் சென்றடையவேண்டுமென்பதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

- இவ்வாறு மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை அம்பங்கங்கை பிரதேச செயலாளர் பிரிவில் இம்புல் கொல்ல மின்விநியோகத் திட்டத்தைத் திறந்து வைத்துப் பேசியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குவைத் அரசாங்கத்தின் நிதியுதவியைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள மேற்படி மின்விநியோகத் திட்டத்தின் மூலம் இப்பகுதிக் கிராமங்களிலுள்ள 600இற்கும் அதிகமான குடும்பத்தினர் பயன்பெறவிருக்கின்றனர்.

அமைச்சர் அத்தநாயக்க தொடர்ந்து கூறியபோது -

நாட்டில் தற்போது அமைதிச் சூழ்நிலை உருவாகியுள்ளது. அதன் காரணமாகவே உலக நாடுகள் பல நமது நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பல்வேறு வகையிலும் உதவி செய்ய முன்வந்துள்ளன. இந்த நிலை தொடரவேண்டுமானால் இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழல் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

இநத முயற்சியில் விரிசல் ஏற்படுமானால் அது பாரதூரமான விளைவுகளுக்கே வழிவகுக்கும். ஆகவே, அரசின் இந்தப் பாரிய முயற்சிக்கு நாட்டின் அனைத்து மக்களும் இன, மத, மொழி, கட்சி பேதங்களை மறந்து பூரண ஒத்துழைப்பை வழங்குவது கட்டாயமாகும்.

- என்றார். (ஒ-ஓ)

# வாசகர் திருமுகம்

## நோயாளர் நலன்புரிச் சங்கம் மீண்டும் இயங்காதா?

1996ஆம் ஆண்டுகளில் யாழ். ஆஸ்பத்திரி, மந்திகை ஆஸ்பத்திரி, சாவகச்சேரி, பளை உட்பட பல வைத்தியசாலைகளில் இயங்கி வந்த நோயாளர் நலன்புரிச் சங்கங்கள் மீண்டும் அவற்றின் பணியையும் நோயாளர்களை பராமரிப்புக்கும் தங்களது சேவையையும் யாழ். மண்ணில் தொடரவேண்டும். பொதுவாக ஒரு நோயாளியைப் பாராமரிக்க உதவியாளர் இல்லாமல் எத்தனை பேர் கஷ்டப்படுகிறார்கள். இந்தச் சங்கங்கள் இயங்கினால் மக்களுக்கு எவ்வளவோ உதவியாக இருக்கும். வேலையற்று இருக்கும் எத்தனையோ பேர் இதன்மூலம் தொழில்வாய்ப்பைப் பெறமுடியும். மக்களின் தேவையறிந்தும் தொழில் வசதிகள் அற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் சார்பாகவும் இந்த மடல் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சம்மர்ப்பணம்.

**நோயாளர் சார்பாக**
**ஒரு நோயாளி.**

## குண்டும் குழியும் நிறைந்த வீதி

யாழ். - பருத்தித்துறை வீதியையும், கோவில் வீதியையும் இடையே சட்டநாதர் வீதியூடாக இணைக்கும் கொண்டலடி வீதியானது, அது நிர்மாணிக்கப்பட்ட காலத்திலிருந்து சுமார் 40 வருடங்கள் இன்னமும் எதுவித திருத்தமுமின்றிக் காணப்படுகிறது. கோடை காலத்தில் வாகனங்கள் செல்லும்போது தூசுகளை அள்ளி வீசுவதாகவும், மாரிகாலத்தில் அவ்வீதியூடாகப் பயணம் செய்வோரின் உடுப்புகளில் சேறு அள்ளி வீசுவதாகவும் இருக்கும் இவ்வீதியைப் புனரமைக்குமாறு பல தடவை பத்திரிகைகள் ஊடாகவும் மற்றும் யாழ். மாநகரசபையினர், அரசியல் பிரமுகர்கள் பலரிடமும் வேண்டுகோள் விடுத்தும் அவை எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே போயின. மக்களின் இயல்பு வாழ்க்கையை நோக்காகக் கொண்டு அபிவிருத்திப் பணிகள் யாழ். குடாநாட்டில் முடுக்கிவிடப்பட்டிருக்கும் இந்நேரத்திலாவது மக்கள் நெருங்கி வாழும் இப்பகுதியில் வீதி செப்பனிடப்படுமா என்று ஆவலுடன் நோக்குகிறார்கள் இப்பகுதி மக்கள்.

**கொண்டலடி ஞானவைரவர்**
**சனசமூக நிலையம்.**

## திடமற்ற உடற்கல்வி துறையும் திண்டாடும் மாணவர்களும்

இலங்கையில் முதற்றடவையாக யாழ். பல்கலைக்கழகத்தில் 1998ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி இரண்டு வருட உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பமானது. இக்கற்கை நெறியில் இருந்து முதலாம் அணி மாணவர்கள் வெளியேறி 3 வருடங்கள் பூர்த்தியாகியும் எதுவித வேலைவாய்ப்பும் இத்துறை சார்பாகக் கிடைக்கவில்லை என்பது மாணவர் மத்தியில் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக கடந்த காலங்களில் பலருடன் தொடர்புகொண்டபோதும் பலன்தரும் பதில்கள் கிடைக்கவில்லை. ஆனால், இன்றைய புள்ளிவிவரங்களின்படி உடற்கல்வி ஆசிரியருக்கு 150இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளதாக அறிந்துள்ளோம். இதனை அறியப்படுத்தியுள்ள போதிலும் ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டியவர்கள் நடவடிக்கை எடுக்காதிருப்பது வியக்கத்தக்க விடயமாகும். இந்நிலையில், தொடர்ந்து மூன்று அணிகள் வெளியேற்றப்பட்டுள்ளமை மாணவர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி, இத்துறையை ஆரம்பித்தவர்களோ எதுவித அக்கறையும் காட்டுவதில்லை. மாணவர்களின் முயற்சியும் கைகூடாத நிலையில் கண்களில் நீரும் கைகளில் சான்றிதழுமாக கலங்குகின்றார்கள். இதனை கருத்திற்கொண்ட ஆசிரியர் சங்கம் உடற்கல்வி துறை மாணவர்களின் வேலைவாய்ப்பு தொடர்பாக கல்வி அமைச்சருடன் பேசி கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தபோதும் இதுவரை எதுவித செயற்பாட்டையும் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. ஆனால், மாணவர்களோ வழிமேல் விழிவைத்த வண்ணம் காலங்களை இழக்க வேண்டியுள்ளது. எனவே, கல்விச் சமூகம் இதனை கருத்திற்கொண்டு மாணவர்களின எதிர்காலத்தைப் பாதிக்காது உடனடியாக நடவடிக்கையை எடுக்கவும்.

**பாதிக்கப்பட்ட**
**மாணவர்கள்.**

## நாடகப் போட்டியில் பார்வையாளருக்கு ஏற்பட்ட ஏமாற்றம்

அண்மையில் கல்வி வலயம் ஒன்றில் பாடசாலைக்களுக்கிடையில் தமிழ்த்தின நாடகப் போட்டி நடைபெற்றது. இங்கு போட்டி முடிவுகள் பார்வையாளர் மத்தியில் விசனத்தை உண்டாக்கியதை அவதானிக்க முடிந்தது. இதில் 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட நாடகம் சிறப்பாக அமைந்திருந்தபோதிலும், முதலாம் இடத்தைப் பெற்றுக்கொள்ளும் என்ற பார்வையாளரின் எதிர்பார்ப்பை நிராசையாக்கியது.

முதலாவதாகத் தெரிவுசெய்யப்பட்ட நாடகம் குறியீட்டினையே முதன்மைப்படுத்தி போடப்பட்டிருந்தது. அது என்ன கருத்தை வெளிப்படுத்தியது என்று தெரியவில்லை. பார்வையாளர் மத்தியிலே விளங்காத இந்நாடகத்தை எப்படி முதலிடத்துக்குத் தெரிவுசெய்ய முடியும் என்ற சந்தேகத்தை கிளப்பியுள்ளது. பார்வையாளர் மத்தியிலே விளங்காத இந்நாடகம் தீர்ப்பாளர் மத்தியில் விளங்கியிருக்குமா?

எனவே, நாடகமும் அரங்கியலும் சம்பந்தமான பூரணமான அறிவு தீர்ப்பாளர்களுக்கு இருக்கவேண்டும். நாடகமும் அரங்கியலும் பாடத்தினை விசேடமாக கற்று, அதில் செயன்முறையில் பரீட்சயம் பெற்றவர்களையே நடுவர்களாக நியமித்து சரியான தீர்ப்பினை வழங்கவேண்டும்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் இனி இடம்பெறாவண்ணம் அவதானிக்குமாறு மேலதிகாரிகளுக்கு கோரிக்கை விடுகிறேன்.

**நாடகமும் அரங்கியலும்**
**பாடத்தை சிறப்பு பாடமாக பயிலும்**
**யாழ். பல்கலைக்கழக மாணவி.**

# இன உணர்வு ஆர்ப்பரிக்கும் மற்றுமொரு பொங்கு தமிழ்

**ஈழத்தமிழர்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு இன்று வவுனியாவில் இடம்பெறுகிறது. அதனை யொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**



தமிழின உணர்வு ஆர்ப்பரிக்கும் மற்றும் ஒரு 'பொங்கு தமிழ்' நிகழ்வு இன்று வவுனியாவில் இடம்பெறுகிறது.

தமிழரின் அபிலாஷைகளையும் இலங்கையில் தமிழ் மக்களின் அவல நிலையையும் உலகின் செவிகளில் உரத்துக்கூறும் நிகழ்வே பொங்கு தமிழ் நிகழ்வாகும்.

இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வு இலங்கையின் அரசியல் சூழ்நிலை மாற்றத்திற்கு மிக முக்கியமான காரணியாக இருந்துள்ளதென்பதனை எவரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

2001ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் முதன்முதலாகப் பொங்கு தமிழ் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது. அப்போது படைத்தரப்பினரால் மிகமோசமான கெடுபிடிகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஆனால், அந்தக் கெடுபிடிகளையும் அச்சுறுத்தல்களையும் மீறி மத குருமார், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலதரப்பினரும் அந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



அந்தப் பொங்கு தமிழ் நிகழ்வினைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளிலும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களால் பொங்கு தமிழ் நிகழ்வுகள் எழுச்சியுடன் நடத்தப்பட்டன.

இதேசமயம் மட்டக்களப்பு, திருகோணமலை, நெடுந்தீவு, நயினாதீவு, கிளிநொச்சி உட்பட தமிழர் தாயகத்திலும் பொங்கு தமிழ் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இப்பொங்கு தமிழ் நிகழ்வுகளுக்கெல்லாம் மகுடமாகக் கடந்த மே மாதம் 26ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வு அமைந்தது. வடபகுதிக்கு சுற்றுலா வந்திருந்த சிங்கள, முஸ்லிம் மக்கள் உட்பட மூவினத்தவரும் கலந்துகொண்ட நிகழ்வாக அது அமைந்தது. இலங்கைப் பிரதமரின் சார்பில் இரு பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

ஆனால், வவுனியாவில் இன்று இடம்பெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வு முதற் பொங்கு தமிழ் நிகழ்வைப் போன்று கெடுபிடிகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின்னர் இடம்பெறும் பொங்கு தமிழ் நிகழ்வுகளிலே மிகவும் அதிக கெடுபிடிகளைத் தாண்டி இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது.

**செந்தூர்ராஜ்**

வவுனியா இராணுவத்தளபதி பொங்கு தமிழ் விடுதலைப் புலிகளின் நிகழ்வு, அதில் எப்படி அரச ஊழியர்கள் கலந்துகொள்ள முடியும் என்று" கேள்வி எழுப்பினார்.

அதுமட்டுமன்றி, வவுனியா அரச அதிபர் உட்பட முக்கிய பல அரச அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு இது தொடர்பாக மிரட்டல் பாணியில் அறிவிப்பும் விடுக்கப்பட்டது. இத்தகைய முட்டுக்கட்டைகளை எல்லாம் புறந்தள்ளிவிட்டுத்தான் இன்று பொங்கு தமிழ் வவுனியாவில் பொங்கிப் பிரவகிக்கப்போகின்றது.

வவுனியா மாவட்டத்தின் மூலை முடுக்கெங்கும் பொங்கு தமிழ் பானை ஊர்தி சென்று மக்களின் உள்ளத்து உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. புரட்சிகரமானதும் சிவப்பு, மஞ்சள் கொடிகளும் வவுனியா, நிறைவான ஒரு பொங்கு தமிழ் நிகழ்வுக்கு தயாராக இருப்பதைப் பறைசாற்றி நிற்கின்றன.

இராணுவத்தினரின் சோதனைகளும், ஒத்திகைப் பயிற்சி எனும் போர்வையிலான மிரட்டல் நாடகங்களும் பொங்கு தமிழ் எழுச்சியை கடுகளவேனும் குறைத்துவிடவில்லை.

இந்த நிலையில்தான் நேற்று முன்தினம் வவுனியாவில் நடந்த கலந்துரையாடலில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கு ஒத்துழைப்பதாக வவுனியா படைத்தரப்பு இறங்கி வந்துள்ளது. வவுனியா பொங்கு தமிழ் நிகழ்வு அதன் இலக்கை நிச்சயம் அடைந்துவிடும் என்பதற்கு இதுவே சாட்சியம் கூறுகின்றது.

'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'நாங்கள் எமது வீடுகளுக்குச் செல்ல இராணுவமே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்' என்ற கோஷம் வானை முட்ட பேரொலியுடன் தமிழினம் மீண்டும் ஒருமுறை பொங்கியெழப்போகிறது.

- ★ தமிழ்த் தேசியம்
- ★ மரபுவழித்தாயகம்
- ★ சுயநிர்ணய உரிமை

என்ற ஈழத் தமிழரின் அபிலாஷைகள் இப்பொங்கு தமிழ் நிகழ்வின் மூலம் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தப்படப் போகின்றன.

இடைக்கால நிர்வாக விடயத்தில் இழுத்தடிப்பை மேற்கொள்ளும் அரசின் பாசாங்கை வெளிப்படுத்தும் பொறுப்பும் வவுனியா பொங்கு தமிழ் நிகழ்வின் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது.

'சுதந்திர வேட்கை கொண்ட இனத்தை எந்தவொரு ஆதிக்க சக்தியாலும் அடக்கிவிட முடியாது' என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் கூற்றினை மீண்டும் ஒருமுறை மெய்ப்பிக்கும் வகையில் பொங்கட்டும் இன்று வவுனியாவில் பொங்குதமிழ். ★

# நல்லொழுக்கம் நிறைந்த மாணவர்கள் பாடசாலை நிகழ்வு மூலம் உருவாகுவர்!

## வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

குருநகர்,செப்.24

மாணவர்கள் மத்தியில் நல்லொழுக்கம் வளரவும், அவர்கள் நற்பிரஜைகளாக மாறவும் பாடசாலை நிகழ்வுகள் வழிசமைக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

யாழ். புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பாடசாலை திறந்த வெளியரங்கில் அதிபர் அருட்செல்வி ஜீ.செல்வராணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு பாடசாலையின் சிறப்பிற்கும், வளர்ச்சிக்கும் பெற்றோர்களது பங்களிப்பு அவசியமானதாகும். பிள்ளைகளுடைய தேவைகளை அறிந்து அவர்களது வளர்ச்சிக்கு - உயர்வுக்கு - வழிகாட்டிகளாக அமையும் பெற்றோர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்.

கல்வியின் நோக்கம் சிறந்த விழுமியங்களை வளர்ப்பது, ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்குவது. பெரியோர்களை மதிக்கக்கூடிய மாணவர்களை உருவாக்குவதே பாடசாலைகளின் நோக்கம். இதனை மாணவர்களுக்கு ஏற்படுத்துவதற்காக தற்போது கல்வியுடன் இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் நடத்தப்படுகின்றன. இதற்கு மாணவர்களைப் பெற்றோர் அனுமதிக்கவேண்டும்.

மாணவர்களை வெறும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையச் செய்வதுதான் பாடசாலைகளின் நோக்கமாக இருக்கக்கூடாது. கல்வியில் ஆண்டுதோறும் புதியமுறைகள் புகுத்தப்படுகின்றன. இவ்வாண்டு தரம் 5 மாணவர்களுக்கு கணிப்பீட்டு முறை புகுத்தப்பட்டுள்ளது.

ஒரே திசையில் செல்வது மாணவர்களுக்கு மன அழுத்தங்களை உருவாக்குகிறது. இதனால்தான் மாணவர்கள் சமூகத்துக்கு உதவாதவர்களாக மாறுகிறார்கள். இந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய மறுசீரமைப்பு, மாணவர்களின் பல்வேறு சமநிலைகளை அளக்கும் தன்மையுடையதாக உள்ளது. மாணவர்களிடம் ஆகக்கூடிய அழுத்தம் தேவையில்லை. மாணவர்கள் ஓய்வாக இருக்க, அவர்கள் விளையாட்டில் ஈடுபட, இசையை ரசிக்க, மாணவர்கள் தமது உளத்திறமையை வெளிப்படுத்த பெற்றோர்கள் பூரண ஆதரவு வழங்கவேண்டும்.

குறிக்கப்பட்ட பாடசாலைக்கு மிகவும் தொலைவில் இருந்துகொண்டு பொய்ச்சான்றிதழ்களைக் காட்டி பாடசாலை அனுமதி பெறுவதில் அரசு தற்போது இறுக்கமான நடைமுறையைப் பின்பற்றுகிறது. அரசின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலவசக் கல்வி பற்றித் தெளிவான வரையறை உள்ளது. பிள்ளைகளைப் பெற்றோர் அருகில் உள்ள பாடசாலைகளில் சேர்க்க வேண்டும். அருகில் உள்ள பாடசாலையில் சேர்ப்பதனால் போதியளவு நேரம், பாதுகாப்பு என்பன கிடைக்கும்.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் 20 மாணவர்கள் ஒரு வகுப்பில் ஆரம்பக்கல்வியை கற்கவேண்டும் என்னும் நடைமுறையுள்ளது. ஆனால், எமது நாட்டில் ஆசிரியா வளம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் ஒருவகுப்பில் 30 தொடக்கம் 32 வரையிலான மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இதற்கு மேல் மாணவர்களை ஒருவகுப்பில் அனுமதித்தால் மாணவர்களை ஆளுமை உள்ள பிரஜைகளாக மாற்றமுடியாது - என்றார். (ம-51)

# பணநோட்டை நாசப்படுத்தினால் ஒரு லட்சம் ரூபா வரை அபராதம்

கொழும்பு,செப்.23

பணநோட்டின் மீது எழுதி அசுத்தப்படுத்துதல் மற்றும் கிழித்து நாசப்படுத்தல் ஆகிய குற்றங்களுக்காக இதுவரை அறவிடப்பட்டு வந்த 500 ரூபா அபராதத் தொகையை ஒரு லட்சம் ரூபாவரை அதிகரிப்பதென இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

2002ஆம் ஆண்டு நிதிச்சட்ட பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் இவ்வித நடவடிக்கைகள் தேசிய குற்றங்களாகக் கருதப்பட்டு இந்த அபராதத் தொகையை அதிகரிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஒருலட்சம் ரூபா வரையான அபராதம் விதிக்கப்படுவதற்கு மேலதிகமாக ஒரு மாதம் வரையான சிறைத்தண்டனை விதிக்கவும் இச்சட்டமூலம் வழிவகுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பிறர் தோளில் ஏறி ஆட்சிக்குவர முயல்பவர்கள் சோம்பேறிகள்!

## எதிர்க்கட்சித் தலைவர் ராஜபக்ஷ சாட்டை

கொழும்பு,செப்.24

சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்காமல், மற்றவர்களைக் கொண்டு மறுசீரமைத்து ஆட்சிக்குவர முயல்வதால் கட்சிக்கு நேரும் பாதிப்பு மிக விசாலமானது என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

தெஹிவளை ஜயசிங்க நினைவு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கட்சிக் கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "மற்றவர்கள் தோளில் ஏறி அதிகாரத்துக்கு வரமுயற்சிப்பவர்கள் கோழைகள், சோம்பேறிகள். ஆட்சியைப் பிடிக்கவேண்டுமானால் முதலில் கட்சியைப் பலப்படுத்தவேண்டும். கட்சியின் கடந்த கால பணிகளை உதாரணமாகக் கொண்டு ஐந்து மகாசக்திகளையும் ஒன்றிணைப்பது என்றைக்கும் முக்கியமானதாகும். மற்றவர்களைப் போன்று கட்சியை மாற்றும் கொள்கை என்னிடமில்லை" - என்றார்.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மீண்டும் உண்ணாவிரதப் போர்

கொழும்பு,செப்.24

வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கத்தினர் மீண்டும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பணிமனை முன் நேற்றுமுன்தினம் சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 08.09.2003 அன்று தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம், தமிழ்க் கட்சி கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் பரிந்துரைக்கமைவாக முதலில் மறியல் போராட்டத்தையும் பின்னர் உண்ணாவிரதப் போராட்டத்தையும் 21ஆம் திகதி வரை அவர்கள் ஒத்திவைத்திருந்தனர்.

"மீண்டும் 22ஆம் திகதி திங்கள் முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள நாம், துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உடன் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக்கோரி எமது உண்ணாவிரதப் போராட்டத்தை தொடரவும் அத்தோடு, தொடர்ந்து பாடசாலைப் புறக்கணிப்பிலும் ஈடுபடுவதற்கும் முடிவு செய்துள்ளோம்" - என்று பகுதிநேர ஆங்கில ஆசிரியா சங்கத் தலைவர் ஸ்ரீ.கரன் தெரிவித்தார். (ம)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவைக் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு உடற்கல்வி அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பல முக்கியமான விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதால் அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு விளையாட்டு அவைச் செயலாளர் கேட்டுள்ளார். (ம-6)

## சைவ பரிபாலன சபை

★ சைவத்தமிழ் மக்களின் மிகப்பழமைவாய்ந்த புதுமையான பத்திரிகை

வாங்கி வாசியுங்கள்!

மாணவர்கள், இளைஞர்கள், பெரியோர்கள் எல்லோரும் வாசிக்க வேண்டிய ஒரேயொரு மாதப் பத்திரிகை.

விலை: 12 ரூபா

(C/30325)

சைவப் பிரகாச அச்சியந்திரசாலை (கனனி அச்சகம்)
450, கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம்.



## Curvform Carina SILVER SHIELD Brassieres

தயாரிப்புகளான

★ சொக்ஸ், ★ பெனியன், ஜட்டிகள் ★ எலாஸ்ரிக் ★ நூல், சிப்





மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள



## ஸ்ரீ முருகன்

303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No: 021 222 5392

பாடசாலைகளுக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும் (C-30247) (29-12-18)


## கண்காட்சி

அச்சுவேலிபுனித திரேசாள் மகளிர் கல்லூரியின் கற்பித்தல் துணைச் சாதனக் கண்காட்சி இன்று புதன் கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரி மரிய றொசாறியோ தலைமையில் நடைபெறும்.

யாழ் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

(ஓ-11)

## எழுத்தாக்கத்திறன் போட்டி

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலயத்தில் இருந்து விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான எழுத்தாக்கத்திறன் போட்டி, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறும் என்று தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## பரிசளிப்பு விழா

மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோமன கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலய வருடாந்த பெற்றோர் தினவிழாவும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன. வித்தியாலய அதிபர் சகோதரி செல்வி செபஸ்தியாம்பிள்ளை அழகேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக மானிப்பாய் பங்குத்தந்தை அருட்திரு.ஏ.ஜே.பெனற் அடிகளார் கலந்து கொள்வார். மாணவர்களின் கலைநிகழ்சிகளும் இடம்பெறவுள்ளன.

(ம-135)

## தேவை

நகைக் கடைக்கு நகைத் தொழிலில் நன்கு அனுபவமுள்ளவர் தேவை.

தொடர்பு:
க.சுந்தரலிங்கம்
முகாமையாளர்,
ராஜா தியேட்டர்.
T.P 2222318

(22932)(29-18)

# அரசாங்க அறிவித்தல்
# கூறுவிலை கோருதல்

மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பின்வரும் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு இப் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| பொருள்களின் பெயர் | தொகை |
|---|---|
| 1. Computer Specification - P4 | |
| ✪ Make - DELL Branded (Desktop Casing) | 10 |
| ✪ Processor - Intel P4 2.4 GHz Mobile | |
| ✪ Front size bus speed - 400 MHz | |
| ✪ Intel Original motherboard with Intel chipset | |
| ✪ 256 DDR RAM | |
| ✪ 40 GB or 60GB Hard disk | |
| ✪ 32 MB Memory VGA Adaptor | |
| ✪ Floppy Disk Drive | |
| ✪ DVD Rom | |
| ✪ 2USB, 2 Serial & 1 Parallel | |
| ✪ AGP & 3 PCI slot | |
| ✪ Network Card | |
| ✪ Sound card - 32 bit | |
| ✪ Internal modem 56 Kbps | |
| ✪ Speaker 1000 W | |
| ✪ Monitor 15" Color SVGA (or Higher) | |
| ✪ PS/2 Key board | |
| ✪ PS/2 Mouse | |
| ✪ Dust cover | |
| ✪ Filter Glass 15" | |
| 2. Line - Interactive UPS 650 VA Fenton 600 VA Power Tree or Prolink | 10 |
| 3. Printer - Epson LQ 300+ | 5 |
| 4. Printer - HP Laser Jet 1300 | 1 |
| 5. Toner - HP Laser Jet 1300 | 5 |
| 6. Computer Table 4'x1.8'x2.5' (Wood) | 10 |
| 7. Computer Chairs ( Revolving) | 12 |
| 8. Stabilizer Servo Type - 1000 W (Goldsource) | 5 |

2. கூறுவிலைகளை சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கூறுவிலைப் படிவங்களை 2003.09.24 ஆம் திகதி தொடக்கம் 2003.09.29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. கூறுவிலைகளை சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பாக ரூபா 5,000.00 ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டின் பிரதியை கூறுவிலை கோருதல் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

4. பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்பட்டியலை இரு பிரதிகளில் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத்தபால் உறையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.09.29ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அப்பொழுது கூறுவிலை கோரியவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

5. கூறுவிலைகள் உள்ளடக்கிய தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் ''மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பொருள்களின் கூறுவிலைகள்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறுவிலை கோரியவர் 3 நாள்களுக்குள் என்னால் வழங்கப்பட்ட வழக்கு கட்டளைகளுக்குப் பொருள்களை வழங்கல் வேண்டும்.

7. இவ்விளம்பரத்தில் கூறப்பட்டுள்ள பொருள்களின் மாதிரிகளுக்கும் தரங்களுக்கும் இணங்க இப்பொருள்களை வழங்கக் கூடியவர்கள் மட்டுமே இக்கூறுவிலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். வேறு மாதிரிகளும் தரங்களும் சமர்ப்பிக்கப்படின் அவை இரத்துச் செய்யப்படும் என்பதனை, கூறுவிலை சமர்ப்பிப்பவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரசாங்க அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-30333)(29-12-18)

# வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)

# பதவி வெற்றிடம்

## பொதுமுகாமையாளர் பதவி 101/06

மேற்குறிப்பிட்ட பதவிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தையும், மேலதிக விவரத்தையும் கொத்தணியின் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**01. தகைமைகள்:-** கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் (108/81 சுற்று நிருபப்படி)

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 05 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 6ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் 8வருடம் குறையாத முகாமை மட்டத்திலான பதவியில் அனுபவமும் இதில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்குக்குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர (உயர்தரம்) க.பொ.த. (உயர்தரம்) மூன்று பாடங்களிலான சித்தியுடன் 10 வருடத்திற்குக் குறையாத முகாமை மட்டத்திலான பதவி ஒன்றில் அனுபவமும், இதில் வர்த்தகம் / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

**02. வயதெல்லை :-**

25 - 45 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது) அத்துடன், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தமது விண்ணப்பத்தைத் தாம் கடமை புரியும் நிறுவனம் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**03. சம்பளத் திட்டம்:-**

6000 - 9000 / 140x10 - 160x10 — கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் (31/99 சுற்று நிருபப்படி)

**04. பிணை :-**

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணத்திற்கமையவும், நெறியாளர்குழுத் தீர்மானத்திற்கமையவும் செலுத்தப்படல் வேண்டும்.

**05.** பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 07.10.2003 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாகத் தலைவர், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்.

(சி-30331) (29-12-18)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1964 - 04 - 12



இறப்பு 1999 - 10 - 07

## அமரர் கனகசபை கவிதரன்

அன்புக் கவிதரனே நீ மறைந்து ஆண்டு நான்குமாயிற்றோ!
இன்பப் புவிதனிலே உன் நினைவு மறக்கற்பாலதாமோ?

புலோலி தெற்கு, புலோலி. - குடும்பத்தினர்.

(22929) (26-24-15-19)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சதாசிவம்

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சதாசிவம் 21.09.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தெய்வானையின் அன்பு மகனும் இலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லத்துரையின் பாசமிகு சகோதரனும் கோப்பாயைச் சேர்ந்த அப்புத்துரையின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நெல்லியடி,
கரவெட்டி. (24-15-19) (22930)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### பூக்கன்று விற்பனைக்கு

பாரிஜாதம், மஞ்சள் றெசினா, குறோட்டன், பாம்ஸ், முசந்தாஸ் (வெள்ளை, சிவப்பு), மஞ்சள் கொடிப்பூ, மினி எக்ஸ்சோறா (சிவப்பு, வெள்ளை), சைப்பிரஸ் நமது காலநிலைக்கு உகந்த றோசாக் கன்றுகளும் மற்றும் பல புதிய இன பூக்கன்றுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (ICRCஇற்கு அண்மையில்) T.P.6563 (22769)

### கணனி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Pentium I, 166MHZ கணனி உடன் விற்பனைக்கு உண்டு (பிற்பகல் 3 மணிக்கு முன் பார்வையிடலாம்). தொடர்பு: K.கஜன், இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி (பழைய பிரதேச செயலகம் முன்பாக.(22882)

### விற்பனைக்கு

கொங்கிறீற் கற்கள், மணல், சல்லி விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.சேகர், 162, அரசடி வீதி (டயனா கொமினிகேசன் முன்பாக), நல்லூர். T.P 3146, 0712 347473. (22844)

### விதை நெல் விற்பனைக்கு

400 - 2 H4 இன விதை நெல் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: P.V. குரியர், No.10, செல்வேல், கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு.(22872)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1977இல் பிறந்த, பட்டப்படிப்பு படிக்கும் மணமகளுக்கு படித்த, லண்டன், அமெரிக்கா பொன்சர் உடைய மணமகன் தேவை. தொடர்பு: வி.இ. 2051,மே/பா உதயன். (22916)

### வீடு வாடகைக்கு

உரும்பிராயில் பலாலி வீதிக்கு அருகில் குளியலறைகளுடன் கூடிய 8 படுக்கையறைகளுடனும் வாகனங்கள் தரிப்பிடங்களுடனும் கூடிய நவீன மேல்மாடி வீடு வாடகைக்குண்டு. அலுவலகப் பாவனைக்கு, அரசசார் பற்ற நிறுவனங்களுக்கு ஏற்றவை. தொடர்பு: 51/1, பீற்றசன் லேன், வெள்ளவத்தை. Tele Phone No.074519942, 0777 948245 (22917)

### இறைச்சிக்கோழி

புறொயிலர் 1Kg 150/- சுத்தம் செய்யப்பட்டது. 1kg 225 மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு 1) மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். 2) பொன்னாலை வீதி, விதானையார் வளவு, மானிப்பாய். (22878)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள், Tetra SL பேடு, சேவல் குஞ்சுகள் 29.09.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறை கிளையிலும் பதிவு செய்யலாம். (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு) 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர்) (22778)

### திருமண சேவை

1975ஆம் ஆண்டு, புனர்பூசம் 2ஆம் பாதம், செவ்வாயற்ற, அரசஉயர் தொழில், பட்டதாரி மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமணசேவை, 101/1, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப் புளியடி,K.K.S.வீதி),யாழ்ப்பாணம்.(22922)

# விவசாயக் கண்காட்சியை தொடர்ந்து பார்வையிடலாம்

யாழ்ப்பாணம்,செப்.24

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் கடந்தவாரம் நடைபெற்ற விவசாயக் கண்காட்சியைப் பார்வையிடத் தவறியவர்கள் இந்த மாத இறுதிவரையும் அவற்றில் பெரும்பாலானவற்றை பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்காட்சியில் காட்சிப் படுத்தப்பட்டவற்றில் அநேகமானவை விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களங்களுக்கு உரியனவாகும்.

எனவே, அவை தொடர்ந்தும் அவ்வாறு இருப்பதால் கண்காட்சியைப் பார்வையிடத் தவறியவர்களின் நன்மை கருதி இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் பண்ணை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(ம-10)

## விற்பனைக்கு

புத்தம் புதிய வீடியோ கமரா (PANA SONIC M.D 9000 DIGITAL) மேலதிக BATTARY, BAG என்பனவற்றுடன் விற்பனைக்குண்டு.

**யோகா, 78, K.K.S., வீதி, சுன்னாகம்.**

(22920) (26-14-21-19)

## வீடு, கடைகள் கட்டக்கூடிய சிறந்த காணிகள் விற்பனைக்கு

**கொக்குவில் கிழக்கில், கோயில் றோட்டில் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் மையமாக, சிறந்த இடத்தில் அமைந்துள்ள வீடு, கடைகள் கட்டக் கூடிய பின்வரும் காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.**

1. 41/2 பரப்புக் காணி - *இதில் மிகவும் நல்ல தண்ணீர்க் கிணறும். தண்ணீர்த் தாங்கியும், குளியலறையும் உண்டு.*
2. 51/2 பரப்புக் காணி - *மிகவும் நல்லதண்ணீர்க் கிணறும்*
3. 41/2 பரப்புக் காணி

உடனே நேரில் தொடர்புகொள்க:

ROHAN
'SELVAMAHAL'
19,Temple Road (கோயில் றோட்),
கொக்குவில் கிழக்கு. ☎ 0777 078515

(22892) (21-14-19)

## 'புதியதோர் உலகம் காண்போம்'

## புத்துலக பிரவேசம் - 2003

**மாகாண மட்ட கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும்**

**இடம்:** யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி

**காலம்:** 2003 செப்ரெம்பர் 27, 28, 29ஆம் திகதிகளில்

**நேரம்:** தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(சி-30323) **தொழிற் திணைக்களம், வ.கி.மா. திருகோணமலை.** (21-14-19)

## எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்



**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**

அந்த போக்குவரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.

விலை ரூ. 195,350/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)



பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்



பஜாஜ் - எனது மூத்தவன்



பஜாஜ் - எனது காவலன்

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 2687175 Web Site: http//:www.dpmco.com

பிரதேச கிளை அலுவலகங்கள்: • 174B,கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொ. பே: 082-226146 பக்ஸ்: 082-238134 • 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027-2250037 பக்ஸ்: 027-2250222 • 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-28488 பக்ஸ்: 041-27488 • றீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-2222997 பக்ஸ்: 063-2223662 • 31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-2225048/9 பக்ஸ்: 025-2225050 • தனசிறி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-2222389 • இல. 116, குருணாகல் வீதி, புத்தளம். தொ. பே: 032-2267410 பே/பக்ஸ்: 032-2267411 • பிராந்திய அலுவலகம்: இலக்கம் 72, நூவரெலியா. 052-2235760/61/62/63 பக்ஸ்: 052-2235764 • இல. 83, கண்டி வீதி, யக்கல. தொலை பேசி: 074-872019 தொலை பேசி/பெக்ஸ்: 033-2225522

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர்.........................................................

விலாசம்.......................................................

சேவை நிலையம்...................................... தொலைபேசி........................

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.


Tradlanka Advertising

**Asia's No. 01 IT Education & Training Company soon in Jaffna**

# NIIT®

## YOUR PARTNER IN SUCCESS

Pre - Launch advt.



**WHY SETTLE FOR ANY THING LESS WHEN ASIA'S No. 01 COMPUTER INSTITUTE IS AT YOUR DOOR STEP?**

www.niit.com

**T.P.: 021 - 222 3837**

**No. 347 2/1, Kasthuriyar Road, Jaffna** (C-30324) (24-14-19)

## மேற்பார்வையாளர் தேவை

1. சுத்திகரிப்பு மேற்பார்வையாளர்
(Public Health Engineering Supervisor)

*தகுதியானவர்கள் உடன் அலுவலகத்திற்குச் சமுகம் தரவும்.*

**கிளீன்வெல்**
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(22926) (24-14-19)

## சிங்களம் வழிகாட்டல் ஆசிரியர் மல்வான

புதிய வகுப்புகள் ஆரம்பம்: 24.09.2003
காலம்: 3 முதல் 5 மாதங்கள்

வீடுமுறைக்குப் பின்னர் இன்று முதல் வழமைபோல வகுப்புகள் நடைபெறுகின்றன. பழைய மாணவர்களும் புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.

**திரு.மல்வான**
இல. 56, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(22912) (24-14-19)



கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானமும்
யாழ். நகர் மைய றோட்டரக்ட் கழகமும்
இணைந்து நடத்தும்

## சமய கலாசாரப் போட்டி - 2003

ஆண்டு 1 - 8 வரையான மாணவர்களுக்கு

**சகலகலாவல்லி மாலை பா ஓதுதல் போட்டி**

ஆண்டு 9 - 13 வரை

**கோலம் போடுதல் போட்டி** (தேங்காய்ப்பூ கோலம்)

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் (27.09.2003) சனிக்கிழமைக்கு முன்னர் ஆலயத்தில் 20/- ரூபா செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்யவும்.

மேலதிக விவரங்களுக்கு தினமும் 4 மணிமுதல் 6 மணிவரை ஆலயத்தில் தொடர்புகொள்ளவும். போட்டி எதிர்வரும் (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

**- செயற்றிட்ட இயக்குநர்.**

**ஆலய பரிபாலன சபை.** (சி-30312) (24-14-19)




kit

டயலொக் GSM

உங்களின் சகல தொலைபேசி அழைப்புக்களுக்கும் எந்நேரமும் டயலொக் உடன் இணைந்திருங்கள்.

எதிர்காலம் இன்றே.

# சிறப்புத் தளபதி கருணாவை அமைச்சர் சந்திக்க ஏற்பாடு

கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் சமுர்த்தித் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவது தொடர்பாக சமுர்த்தி விவசாய அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி கருணா அம்மானுடன் பேச்சு மேற்கொள்ள வுள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கரடியனாறு தேனகம் விடுதியில் இப்பேச்சு நடைபெறவுள்ளதாக சமுர்த்தி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய மாகாணங்களைப் போன்று வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் சமுர்த்தித் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களின் மக்களுக்குச் சமுர்த்தித் திட்டத்தின் நன்மைகள் போதியளவு சென்றடையவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் சமுர்த்தித் திட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது, புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் சமுர்த்தி வங்கிகளை திறப்பது, விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகியவை தொடர்பாக இச்சந்திப்பில் அமைச்சர் திஸாநாயக்க ஆராயவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## தனக்குத்தானே குத்தியவர் ஆஸ்பத்திரியில்

மது அருந்திய ஒருவர் தன்னைத் தானே கத்தியால் குத்திக்கொண்டதால் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வி.விஜயபானு (வயது-23) என்பவரே தன்னைத் தானே வயிற்றில் கத்தியால் குத்திக் காயப்படுத்திக் கொண்டவர் ஆவார்.

## சிறுமி மீது வல்லுறவு: இளைஞருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,செப்.24

15 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட இளைஞன் யாழ். நீதிமன்றத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி நடந்ததாகக் கூறப்படும் மேற்படி சம்பவம் தொடர்பாக கைதான யாழ். பிரதான வீதியைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞனை யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் பொலீஸார் நேற்று ஆஜர் செய்தனர். அடுத்த மாதம் 6ஆம் திகதி சந்தேகநபரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தும்படி உத்தரவிட்ட நீதிவான் அதுவரை அவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (ஒ-3-8)

# எய்ட்ஸ் வைரஸ் இல்லாத சமுதாயத்தை உருவாக்க ஒன்றுபட வாருங்கள்!

## ஐ.நா.விசேட மாநாட்டில் அமைச்சர் டிரோன்

நியூயோர்க்,செப்.24

எய்ட்ஸ் வைரஸ் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பணியை முன்னெடுத்துச்செல்ல இலங்கை அரசு, ஐ.நா., அரச சார்பற்ற நிறுவனங்கள், மதத்தலைவர்கள் ஆகியோரிடையே தொடர்புகள் உறுதிப்படுத்தப்படவேண்டும். எய்ட்ஸ் வைரஸ் பரவுவதைத் தடுக்கும் சமூகநீதியிலான நடவடிக்கை பலப்படுத்தவேண்டும்.

எச்.ஐ.வி.-எய்ட்ஸ் பற்றிய ஐ.நாவின் விசேட மாநாட்டில் ஆற்றிய உரையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சரின் இந்த உரை நேற்று முன்னிரவு (இலங்கை நேரப்படி 9மணி) இடம்பெற்றது.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.நாவின் 26ஆவது விசேட கூட்டத்தொடரில் எய்ட்ஸ் வைரஸை ஒழிக்கும் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

அப்பிரகடனத்தின் விடயங்களை மீளாய்வு செய்யும் நோக்கிலேயே இந்த விசேட மாநாடு கூட்டப்பட்டிருந்தது.

அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தொடர்ந்து உரையாற்றுகையில் எய்ட்ஸ் வைரஸ் போன்ற உலகம் முழுவதும் வியாபிக்கும் ஒரு நோய்க்கு முகம் கொடுக்கும் சவாலை வெற்றி கொள்ள வேண்டுமானால் கூட்டு நடவடிக்கையை பின்பற்ற வேண்டும் எனவும் சொன்னார்.

## சிறுவர்கள் ஒப்படைப்பு

தென்மராட்சி,செப்.24

விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் இணைய வந்த இரண்டு சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சி அரசியல்துறை அலுவலகத்திற்கு வந்த அந்த இரண்டு சிறுவர்களையும்,தொடர்ந்து கல்வி கற்குமாறு அறிவுறுத்திய அரசியல்துறையினர் நேற்றுமுன்தினம் அவர்களை வீட்டுக்கு அனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# புல்மோட்டை அரபுக் கல்லூரி விஷமிகளால் தீ வைத்து எரிப்பு!

புத்தளம்,செப்.24

திருமலை மாவட்டத்திலுள்ள புல்மோட்டைக் கிராமத்தில் இருக்கும் 'அன்வாருல் உலூம்' அரபுக் கல்லூரி நேற்று முன்தினமிரவு 11.30 மணியளவில் விஷமிகளால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளதாக கல்லூரியின் தலைவர் மௌலவி ஏ.எம்.எம். ரியாஸ் தெரிவித்தார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி கிடுகினால் வேயப்பட்ட நிலையிலேயே இருந்ததாகவும்- கல்லூரி அமைப்பதை சில தீய சக்திகள் எதிர்த்து வந்ததாகவும்-

அச்சக்திகளே இதனைச் செய்திருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் - அவர் தெரிவித்தார்.

35 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இது குறித்து புல்மோட்டைப் பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கல்லூரி எரிக்கப்பட்டது குறித்து புத்தளத்தில் இயங்கும் வடக்கு உலமாக்களின் நலன்புரிச் சங்கம் நேற்று அவசர கூட்டம் ஒன்றை நடத்தியது. சங்கத்தின் தலைவர் மௌலவி எஸ்.எச்.எம். முபாரக் (ரஷாதி) தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இச்செயலை, காட்டுமிராண்டித்தனம் என்று அனைவரும் கண்டித்துப் பேசினார்கள்.


## அழைப்புக் கட்டளை

இல. 16 பிரிவு 55 (1)

மல்லாகம்/ யாழ்ப்பாணம்/ மாவட்ட நீதிமன்றத்தில்
சதீஸ்குமார் பெண் விமலாதேவி,
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்

வழக்கு இல. மணநீக்கம்/180 எதிர் வழக்காளி

பேரம்பலம் சதீஸ்குமார்,
மே/பா நாகலிங்கம் கனகர்,
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி.

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால், இதனோடு இணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழியேதேனும் இருப்பின் 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 01 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விரகக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகிறீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ம.செல்வரத்தினம்,
பதிவாளர்,
மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மல்லாகம்.

2003,செப்ரெம்பர் 23.

குறிப்பு :-

விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுகின்றீர்.

(22939)



## உள்ளத்தை உறைய வைத்தெம் உறவுகள் பறந்த...
## மூன்றாவது வருட நினைவலைகள்





அமரர்
கணபதிப்பிள்ளை
யோகலிங்கம்
மண் மகிழ
1949.11.05

செல்வி
தமிழரசி
யோகலிங்கம்
மண் மகிழ
1975.05.23

விண் நெகிழ
2000.09.26

திதி:-சதுர்த்தசி

எமது அன்புருவங்களே!
ஆசைத் தெய்வங்களே!
கொடிய ஷெல் அரக்கன்!
உமைக்கொண்டு சென்று
ஆண்டுகள் மூன்றுமானதோ...?
மூன்றல்ல முப்பது சென்றாலும்
ஆறாது எம் துயரம்!
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சந்தை வீதி,
கொடிகாமம்.

(22936) (29-12-18)

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.



## வேலையாட்கள் தேவை

* சமையல் ஆள்
* ரீ மேக்கர்
* சப்ளையர்

ஸ்ரீதேவி உணவகம்
(மந்திகை சந்தை அருகில்)
சாவகச்சேரி றோட்,
மந்திகை - புலோலி.

(C-30329) (29-12-18) (24-15-19)



## அறிவிப்பு

இன்றைய பத்திரிகையில் 3ஆம் பக்கத்தில் நான் வெளியிட்டுள்ள 'காரையம்பதி சத்திரந்தை விநாயகா ஆலயத்தில் இன்று மண்டலாபிஷேகம்' என்ற விளம்பரத்தில் கரப்பிட்டியந்தனை கற்பக விநாயகர் ஆலயம் என்பது 'சத்திரந்தை விநாயகர் ஆலயம்' என தவறுதலாக இடம்பெற்றுள்ளது.

-கனகசபை சுந்தரலிங்கம்
(காரை மணிகண்டன்) (22944)



## தவறிவிட்டது!

பரமு கனகலிங்கம் என்பவரின் மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரங்கள் என்பன 23.09.2003 கைதடிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0777-110727 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (22943) (29-12-18)



## லஷ்மி சினிமா இணுவில்

இன்று முதல்
அருண், தீபு, வடிவேல், விஜயகுமார்
இன்னும் பலர் நடிப்பில்
அன்பு (ரீல்ஸ்)
புதிய நேரம்: 11.00, 2.00, 7.00

## [illegible]

அஜித், லைலா நடித்த
தீனா
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
ULTRA FORCE 2
இரவு 8.45 (பி.நே.)
(Z/22990S)

## நாகம்ஸ் சுன்னாகம்

மாதவன், சிம்ரன், ஸ்நேகா, விவேக் நடித்த
பார்த்தாலே பரவசம் (ரீல்ஸ்)
(சில தினங்கள் மட்டும்)
காட்சி நேரம் : 11.00, 3.00 (பி.நே.)
(Z/22993)

## ராஜா யாழ்ப்பாணம்

சத்தியராஜ், விஜயலட்சுமி,
பாண்டியராஜன், ஸ்ரீமான் நடித்த
ராமச்சந்திரா
காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)


## மரண அறிவித்தல்கள்

### சபாபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை (உடையார்)

கெருடாவில், சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகக்கொண்ட சபாபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை நேற்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவக்கொழுந்தின் (ராசாத்தி) அன்புக் கணவரும் கணபதிப்பிள்ளை, அமரர் திலகவதி, சிவபாக்கியம், சாந்தநாயகி ஆகியோரின் சகோதரரும் நாகபாஸ்கரன் (அஞ்சலி, மீசாலை), ஸ்ரீதரன் (ஜேர்மனி), மனோகரன் (கனடா), சாந்தி (கல்வயல்), நடேஸ்வரி (லண்டன்), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் அருள் (சரசாலை), வாசுதேவன் (கனடா), வனஜா (ஜேர்மனி), சூரியகுமாரி (கனடா), அருள்நேசன் (கல்வயல்), நந்தகுமார் (லண்டன்), சிவானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் டினேஸ், ஸ்ரெபான், லாவணியா, லவீன், ஆதித்தன், ஆருத்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
தா.சிவக்கொழுந்து (மனைவி-ராசாத்தி),
தா.நாகபாஸ்கரன் (மகன்)

(சி-30335) (29-12-18)

### திருமதி ஸ்ரீதரன் அகிலாதேவி

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கல்லாரை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீதரன் அகிலாதேவி நேற்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஸ்ரீதரனின் அன்பு மனைவியும் கஜந்தனின் (தெல்லிப்பழை, யூனியன் கல்லூரி), பாசமிகு தாயாரும் வீரசிங்கம் திரவியத்தின் அன்பு மகளும் வல்லிபுரம் அம்மாப்பிள்ளையின் மருமகளும் இராசமணி, செல்வத்துரை, பூபாலசிங்கம், தனபாலசிங்கம், மகாலிங்கம், துரைசிங்கம், காலஞ்சென்ற மலைமகாதேவி மற்றும் அனந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மகேஸ்வரன், குகனேஸ்வரன், யோகேஸ்வரன், பஞ்சேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2003) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, மல்லாகம் இந்துமயானத்தில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லாரை,*
*மல்லாகம்.*
(22942) (29-12-18)

தகவல்:
ஸ்ரீதரன் (கணவர்)

### திருமதி அல்பிறேற் பாலசிங்கம் பிலோமினா

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டு தங்கச்சியம்மா என்றழைக்கப்பட்டவரும் யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு தொட்டம்மா என்றழைக்கப்பட்டவருமான அல்பிறேற் பாலசிங்கத்தின் அன்பு மனைவி பிலோமினா நேற்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*1ஆம் ஒழுங்கை,*
*1/14, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*
(22945) (29-12-18)

தகவல்:
அல்பிறேட் பாலசிங்கம்,
(கணவர்-முன்னாள் புனிதவளன் கத்தோலிக்க அச்சக ஊழியர்)

# இந்திய மீனவரின் படகோட்டிகள் மீதான சட்ட நடவடிக்கைகள் துரிதமாகும்

## சொலிஸிஸ்டர் ஜெனரல் உறுதி அளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகோட்டிகள் மீதான சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதாக ஊர்காவற்றுறை நீதிவானிடம் சொலிஸ்டர் ஜெனரல் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவிய சமயம் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவரின் 33 படகோட்டிகளும் தம்மை விடுவிக்க உதவுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ். சிறைக்கு நேற்றுசென்ற ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தடுத்துவைக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது தம்மை விரைவில் விடுவிக்கக்கோரி உண்ணாவிரதம் இருப்பதாக படகோட்டிகள் கூறினர்.

அரசியல் ரீதியான நடவடிக்கைகளை எம்மால் எடுக்க முடியாது. சட்ட ரீதியான நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கு எம்மால் உதவ முடியும என்று நீதிவான் அவர்களிடம் தெரிவித்தார். இதனால், தாம் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதாக இந்திய மீனவரின் படகோட்டிகள் கூறினர்.

இந்த விடயம் தொடர்பாக இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசிய ஊர்காவற்றுறை நீதிவான் பின்னர் சொலிஸிஸ்டர் ஜெனரலுடனும் கலந்து பேசினார். (ஓ-3)

## தீவகம் மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாரியம்மன் கோவிலிலிருந்து புறப்படும் ஊர்தி வேலணை துறையூர், புங்குடுதீவு மடத்துவெளி. பிரதான வீதியூடாக குறிச்சிக்காடு, ஆலடிச்சந்தி, சந்தையடி, பெருங்காடு, தம்பர் கடையடிச் சந்தி ஆகிய இடங்களூடாகச் செல்லும்.

தொடர்ந்து, புங்குடுதீவில் இருந்து வேலணை துறையூர், அம்பிகைநகர், சுருவில், புளியங்கூடல், சின்னமடு, நாரந்தனை, பாலக்காட்டுச்சந்தி, மெலிஞ்சிமுனை, கரம்பன், ஊர்காவற்றுறை, தம்பாட்டி ஆகிய கிராமங்களுக்கு ஊர்தி செல்லும்.

நாரந்தனை வடக்கு பிரதான வீதி. சரவணை, ஊர்காவற்றுறை வடக்கு வீதி ஆகிய இடங்களூடாக தீவக கோட்ட அரசியல்துறை செயலகத்தை இன்றுமாலை ஊர்தி சென்றடையும்.

நாளை யாழ். நகரப் பகுதியில் இந்த ஊர்திப் பவனி இடம்பெறவுள்ளது.

இதேவேளை -

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்திப்பவனி தொட்டிலடி, சண்டிலிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, வடக்கு அராலி, செட்டியார் மடச்சந்தி ஆகிய இடங்கள் ஊடாக துணவிச் சந்தியை சென்றடையும். (ஓ-9)

ENGLISH
SPOKEN AND GRAMMAR
By:A.BRITTO
புதிய பிரிவு
ஆரம்பம்:25.09.2003 (வியாழன்)
செவ்வாய், வியாழன் வகுப்புகள்
நேரம்: மாலை 5.00 (ப.நே.)
இடம்:கொக்குவில்ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்.
(12-) (C-30334)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்ற விரும்புகிறீர்கள் என்று சபாநாயகர் வினவினார். உறுப்பினர் என்ற ரீதியில் உரையாற்ற விரும்புவதாக மகேஸ்வரன் பதிலளித்தார்.

உறுப்பினர் என்ற ரீதியில் சபையில் நடைபெற்ற சம்பவம் குறித்தே உரையாற்ற முடியும் என்றும், சபை ஒத்திவைப்பு நேரத்தில் உரையாற்ற நேரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் சபாநாயகர் கூறி அலுவல்களைத் தொடர்ந்தார்.

ஆயினும் பின்னர் கடற்றொழில் நீர்வாழ் உயிரினங்கள் தொடர்பான திருத்தச்சட்ட வரைவு மீதான விவாதத்தின் போது அமைச்சர் மகேஸ்வரனுக்கு உரையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தது.

## கொப்பேகடுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவேண்டும்.

யாழ். குடாநாட்டில் கடந்த 15 வருடங்களாக மீன்பிடி நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பித்துப் போயுள்ளன. கடந்த 18 மாதங்களாக சமாதானம் சூழ்நிலை நிலவினாலும் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்கச் செல்ல முடியவில்லை.

அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பெரும் கடற்பிரதேசம் மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி சர்வாதிகாரி போல் செயற்படுகின்றார். பல தாக்குதல்களை நெறிப்படுத்தி அவற்றில் தோல்வியைத் தழுவியவர் இந்த இராணுவ அதிகாரி.

முல்லைத்தீவு, ஆனையிறவு போன்ற பகுதிகளில் மீனவர்கள் இராணுவத்தினரால் விரட்டியடிக்கப்பட்டனர். இருந்தும் பின்னர், புலிகள் இந்தப் பகுதிகளை மீட்டெடுத்தனர். இப்போது இப்பகுதிகளில் மீனவர்கள் மீளக்குடியமர்ந்து மீன்பிடி நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

குடாநாட்டில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விதவைகள் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மீனவ இனத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கு அரசு சகல உதவிகளையும் வழங்க முன்வரவேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார். (ஓ-3-5)

## கனேடிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்ததாகவும் -

இலங்கைத் தீவுக்கு அடுத்தபடியாக அதிகளவு ஈழத்தமிழர்கள் கனடாவிலேயே வாழ்ந்து வருவதைச் சுட்டிக்காட்டிய தமிழ்ச்செல்வன், ஈழத்தமிழ் மக்கள் மீது கனடா காட்டி வரும் அக்கறை மற்றும் நல்லெண்ணத்தைச் சித்திரிக்கும் விதத்தில் இச்சந்திப்பு அமையக்கூடும் எனக் கருத்துத் தெரிவித்ததாகவும் அறியமுடிகிறது.

தற்போதைய சூழலில் பொருத்தமற்ற அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்படும் சர்வதேசப்பிரமுகர்களைச் சந்திப்பதை ராஜதந்திரக் காரணங்களுக்காகவே பிரபாகரன் தவிர்த்து வருவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஓ)

புதிய வீடியோ CD வெளியீடு
தாயே புவனேஸ்வரி
வீடியோ விமல், யாழ்ப்பாணம். (22941)

## வவுனியாவில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாளர்கள் அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

ஐந்து பக்கங்களிலிருந்து வவுனியாவை நோக்கிப் புறப்படும் பேரணிகளுடன் இன்றைய 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன.

பூந்தோட்டம் சந்தி, ஹொரவப்பொத்தானை சந்தி, மன்னார் வீதியில் குருமன்காட்டுச்சந்தி, கண்டி வீதியில் தமிழ் மகாவித்தியாலயம் மற்றும் யாழ். வீதிப்பக்கம் ஆகிய திசைகளிலிருந்து பேரணிகள் ஆரம்பமாகும்.

இன்று பிற்பகல் 2 மணிக்கு வவுனியா நகர மண்டபத்தைப் பேரணிகள் வந்தடைந்ததும் ஈகச்சுடர் ஏற்றல், தமிழ்த் தேசியக் கொடியேற்றல் ஆகியவற்றோடு நிகழ்ச்சிகள் தொடங்கும்.

'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் அமிர்தலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வை ஒட்டி வவுனியா நகரசபை நுழைவாயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுப் படிகமும் திறந்து வைக்கப்படும்.

கலாசார நிகழ்ச்சிகள் மாலை ஆறு மணிக்கு ஆரம்பமாகும்.

இந்நிகழ்வுகளை முன்னிட்டு வன்னி மாவட்ட தமிழ்க்காங்கிரஸ் தலைவர் கே.ஏ.செந்தில்நாதன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் முதலானோர் செய்திகள் விடுத்திருக்கின்றனர்.

தமிழர் தேசமெங்கும் மக்கள் பேரலையாக எழுந்து வந்து ஒரு குடையின் கீழ் திரண்டெழுந்து தமது உரிமைக்குரலை ஓங்கி ஒலிக்கச்செய்யும 'பொங்கு தமிழ்' ஒரு பண்பாட்டு உணர்வெழுச்சி நிகழ்வு. தமிழர்களின் சுயநிர்ணய உரிமை வென்றெடுக்கப்படும் வரை அது தொடர்ந்து பொங்கிக் கொண்டேயிருக்கும் என்று செந்தில்நாதன் தனது செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

சிவசக்தி ஆனந்தன் விடுத்திருக்கும் செய்தியில், தமிழர்கள் தமது அரசியல் சக்தியையும் ஒன்றுதிரட்டி அதனையும் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கான காலம் கனிந்துள்ளது. தமிழ்மக்களின் ஆயுதப்போராட்டம், அரசியல் சக்தி, வெகுஜனப் போராட்டம் என்பன ஒருங்கிணைப்புடனும் புரிந்துணர்வுடனும் கூடிய மும்முனை சக்திகளாக வெளிப்படும்போது தான் தமிழ்மக்களின் அபிலாஷைகள் வென்றெடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்

## 14 இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்துள்ளனர்.

இந்த அகதிகளை ஏற்றிச் செல்ல வந்தகொண்டிருந்த ஒரு படகு பொலீஸாரைக் கண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. பீடிகளைக் கொண்டு வந்தோரும் அவற்றைக் கரையில் போட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். கைது செய்யப்பட்ட அகதிகள், அவர்கள் தங்கியிருந்த வந்தவாசி முகாமிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டனர்.

SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்
இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCS நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில், அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
DIPLOMA IN COMPUTER PROGRAMMING 12 Months
உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களின் வேலை பெறுவதற்கான உயர் தரமான மென்பொருளை உருவாக்குவதற்கான பயிற்சி
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP 6-7 Months
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING 4-5 Months
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு சகல கணனிகளையும் நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி
உத்தியோகத்தர்களுக்கான மாலை நேர வகுப்புக்கள்,
விரிவுரைகள் யாவும் இந்தியாவிலிருந்து வருகை தந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும்
கூடிய நேர செய்முறைப்பயிற்சி
குறைந்த கட்டணம்
இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படும்.
Online Classes
பெண்களுக்கென தனிப் பிரிவுகள் (Hardware Courses)
பயிற்சி ஆரம்பம் 27.09.2003 02.10.2003
Soft View Computer College
www.arammenporulagam.com
Arammenporulagam@eth.net
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P: 021 2225170

இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி
பவர் செலூலர் விசேட கழிவில் விற்பனைக்கு பவர் செலூலர்
24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
வாகனசேவை 0712387122
I.D.D இணைப்புக்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் இணைக்கப்பட்டுள்ளது.
உத்தரவாதம் உண்டு.
HAND PHONE UNLOCK செய்து தரப்படும்.
எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மேலதிக விபரங்களுக்கு:-
HAND PHONE பழுதுபார்க்கப்படும்
பவர் செலூலர் T.P: 0712 399220, 0712 384624, 0777 242416
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ராஜா தியேட்டர் அருகில்)
(C/30313) (18-16-29)
எமது அங்கீகாரம் பெற்ற முகவர்கள்

| | | |
|---|---|---|
| விஜேய் வீடியோ சென்ரர், புங்குடுதீவு. 0712 399113 | இந்திரா கொமினிக்கேசன், நயினாதீவு அனலைதீவு. 0712 370471, 070 213207 0777 111448 | பிரசன்னா கணனி நிலையம், K.K.S றோட், சுன்னாகம். 0712507828 |
| திருப்பதி கொமினிக்கேசன், மானிப்பாய். 07021 3352, 0777 722914 021 222 5940 021 222 5732 | சன்கொமினிக்கேசன், திக்கரை, காரைநகர். 0712 299 264 070 21 3190 | தீபா கொமினிக்கேசன் பிள்ளையார் கோவில் வீதி, நெடியங்காடு, வல்வெட்டித்துறை. |
| பவர் கொமினிக்கேசன், நெடுந்தீவு. 0712 348922 0712 370491 | சொலக்ஸ் ஒப்றிக்கல், 100, கண்டி வீதி, சாவகச்சேரி. 0777 855328 | K.மதிஅழகன் வல்லை றோட், சங்கானை. 0712 - 358019, 0777 243203 |
| V.அரவிந்தன் சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். 0777 550949 | சுதன் கொமினிக்கேசன், மிருசுவில். 0777 584876 | சோதி கொமினிக்கேசன் வலுப்போடை, களபூமி, காரைநகர். 0712 370480 |
| | R.தயாகரன் வட்டுக்கோட்டை. 0777 244524 | சிவராசா லக்கி எலற்றோனிக்ஸ், மானிப்பாய். |


# மரண அறிவித்தல்

## வன்னியர் வல்லிபுரம்

(ஓய்வுபெற்ற ஊழியர், சிமெந்து கூட்டுத்தாபனம்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் இந்துக் கல்லூரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட வன்னியர் வல்லிபுரம் அவர்கள் நேற்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் பாசமிகு கணவரும் நிர்மலாதேவி, பத்மராணி, லதா, யசோதா, மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தெய்வேந்திரம், தவராசா ஆகியோரின் மாமனாரும் சுயோமினா, பிரமீனா, தஸ்மீனா, மகிழ்ராஜ், சுஜிராஸ், காலஞ்சென்ற கௌசியா மற்றும் சியாத், நிஷாந்தினி, சியோன், மதுஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2003) புதன்கிழமை மாலை 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
லதா (மகள்)

(22946)(12-18)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.